தென்மொழி

அதுதான் என் ஆசை!

முன்னைப் போலத் தமிழ இனம்
இன்னல் துயரம் யாவும் நீங்கித்
தன்னைத் தானே ஆள வேண்டும்
அதுதான் என் ஆசை!
மின்னைப் போலக் கதிரைப் போல
அன்னைத் தமிழ்த் தாய்மொழி, இம்
மண்ணை ஆட்சி செய்ய வேண்டும்!
இதுதான் உள் ஓசை!

உலகம் முழுதும் அலைந்து சாகும்
இலக்கை இழந்த தமிழர், தமிழ்
நிலத்தில் வந்து வாழ வேண்டும்!
அதுதான் என் நோக்கம்!
புலத்தை மீட்டுப் புன்மை தவிர்த்துக்
குலத்தில் தமிழர் ஒன்றே என்னும்
இலக்கை மீண்டும் அடைய வேண்டும்!
இதுதான் என் ஆக்கம்!

ஊரும் பேரும் உலகம் போற்ற
தாரும் நிலமும் தமிழர் தாங்க
ஏரும் நீரும் செழிக்க வேண்டும்
அதுதான் என் வேண்டல்!
தூரும் தும்பும் கசடும் நீக்கி
வீறும் அன்பும் மனத்தில் ஊறக்
கூறும் நலன்கள் குவித்தல் வேண்டும்
இதுதான் என் தூண்டல்!

சுவடி : 21

ஓலை : 9

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
1-25 உருபா

நமக்கு வந்த மடல்கள்.

0: 1084 : மதிப்பிற்குரிய பாவலரேறு ஐயா, அவர்கட்கு,

அகர முதலி வெளிவந்தால்
அருந்தமிழ் பெற்ற சிறப்பெல்லாம்
பகலை யளிக்கும் கதிரைப்போல்
பாருக் குணர்த்த வழிபிறக்கும்!
அகத்தில் தென்மொழி இதையெண்ணி
ஆற்ற வல்லவர் பாவாணர்
முகமலர்ந் தேற்றுப் புரிவரென
முதலில் உரைத்தது தென்மொழியே!

தென்மொழி எடுத்த முயற்சியினால்
சீர்கொள் அகர முதலியென
இன்று காணும் பேறுபெற்றோம்;
எனினும் குறையை வைத்துவிட்டார்
தென்மொழிப் பெயரைக் குறித்திலரே!
செந்தமிழ் மக்கள் இதையறியத்
தென்மொழி எழுதிக் காட்டியதைச்
சிந்தனை செய்பவர் மிகச்சிலரே!

புண்மேல் மொய்க்கும் ஈக்களைப்போல்
பொருள்மிகச் சேர்க்கும் குறிக்கோளாய்க்
கண்முன் நடந்த நிகழ்ச்சியினைக்
கயமை நெஞ்சர் மறைத்தாலும்
உண்மை ஒருநாள் வெளித்தோன்றும்
ஒளித்தோர் முகத்தில் உமிழ்வரென
எண்ணும் அறிவைப் பெற்றிருந்தால்
இப்படி உண்மையை ஒளிப்பாரா ?

— வீ. வில்வநாதன், வெங்காலூர்.

0: 1085 : பேரன்பிற்கும் பெருமதிப்பிற்கும் உரிய பாவலரேறு ஐயா, அவர்களுக்கு,

வணக்கம் பல. உங்கள் தொண்டு முயற்சிகள் அனைத்தும் எப்படியேனும் வெற்றி பெற்றேயாக வேண்டும் என்பதே என் தணியாத அவா. உங்கள் முயற்சியில் ஒரு துரும்பளவேனும் துணை நிற்கும் வகையில் என்னால் இயன்றதைச் செய்து வருவேன். அத்தகு முயற்சிகளில் ஈடுபடுவதன் மூலம் பெற்ற பட்டறிவு ஊக்கமளிப்பதாக இல்லை; அது கண்டு உள்ளம் நோகவே செய்கிறது.

ஆரவார அரசியல் மின்னலில் தம் உண்மைத் தொண்டுகள் மறைக்கப்படுகின்றனவே. எத்தனைப் பெரியார்கள் தோன்றினாலும், ஏதுங்கெட்ட தமிழர்களுக்குச் சூடு சுரணை கொஞ்சமும் வரப் போவதில்லை......பார்ப்பானுக்கு இருக்கும் இன உணர்வு வீரத் தமிழர்களுக்கு இருக்கவில்லையே. இந்தச் சுரணைக் கெட்ட தமிழர்களின் குருதியை மாற்றினாலொழிய அவர்களுக்கு இனவுணர்வு வருமா என்பது ஐயத்திற்குரியதே. தமிழர்கள் இந்தவெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டாமா ? வினைகள் செயலை முறியடிக்கத் துடித்தெழ வேண்டாமா? தங்கள் தொண்டன்,

— சீத்தலைச்சாத்தனார், (வி.உ. சித்தாராமன்) உ.செல்லூர்

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)



"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

[நிறுவனம் தி. பி. 1990 (1959)]



தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாதல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர் : பெருஞ்சித்திரனார்

புரப்பாளர்கள் : தென்மொழி முல்லைவாணன், தென்மொழி ந. முத்துக்குமரனார், தென்மொழி. ப. துரையரசன், தென்மொழி நா. இளமாறன், தென்மொழி பழநி-மகிழ்நன், தென்மொழி எசு. ஆர். பிரான்சிசு, தென்மொழி கா. இளமுருகன்

(பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன.)

சுவடி:21] ௨௦௧௬ ஆடவை (சூன்-சூலை-85) [ஓலை-9

உண்மையான இனமுன்னேற்றம் என்பது உரிமை மீட்பே!



தமிழர்கள் இன்றைக்குத் தங்களை ஈடேற்றிக் கொள்ளச் செய்து கொண்டிருக்கும் ஒட்டு மொத்தமான முன்னேற்ற முயற்சிகளில், முதலில் செய்ய வேண்டிய தலையாய முயற்சி, தமிழின உரிமை மீட்பு முயற்சியே. என்பது பலவகையான ஆய்வுகளுக் கிடையே தெளியப்பெற்ற உண்மையாகும். எவ்வளவு பெரிய அறிஞரோ, ஆராய்ச்சியாளரோ, சாய்கால் உள்ள தலைவரோ இன்றைக்கு இதை அறியாமையாலோ, அறிந்தோ, மறுத்தாலும்,

நாளைக்கு இக் கருத்தையே உண்மை என்று ஒப்புக் கொள்ளப் பெறும் காலம் வரத்தான் வரப்போகிறது. கடந்த 25 ஆண்டுக் காலமாக நாம் இதை மிகவும் அழுத்தமும் திருத்தமுமாகவே கூறிவருகிறோம். அன்றைக்கு இதை ஏளனப் படுத்தியவர்கள், இழிவாகப் பேசியவர்கள், எதிர்த்தவர்கள் கூட இன்றைக்கு நேரடியாக இல்லாமற்போனாலும், தங்கள் சாய்காலை இழந்து கொள்ளாத நிலைக்கு இலைமறை காயாகவேனும், பேசியும் எழுதியும் வருவதைக் குழுகாய மாறுபாடுகளை மிகவும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டு வருபவர்கள் கட்டாயம் உணருவார்கள்.

தமிழ்மொழியைப் பற்றியே பேசாதவர்கள்கூட இன்றைக்கு ஆங்காங்கே தனித்தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்தி வருவதைப் பார்க்கிறோம். தமிழ் இனம் என்று பேசாமல் திராவிட இனம் என்று பேசியே எழுதியே வந்தவர்கள், எங்கு எதிர்காலம் தங்களைப் புறக்கணித்து விடுமோ என்று அஞ்சி 'சாற்றில் மலம் கிடக்கிறது; கொஞ்சம் இறுத்தால்போல் ஊற்று' என்னும் பாணியில், அடிக்கடி தமிழினம்தமிழினம்என்றுபேசுவதும், 'தமிழா இன எழுச்சி கொள்' என்று கடந்த இருபத்தைந்தாண்டுகளாகக் கூறிவரும் உணர்வுக்குரலை உரிமை முழக்கத்தை, ஏதோ இப்பொழுதுதான் இவர்கள் புதிதாகக் கண்டு சொல்பவர்களைப் போல,நொடிக்கு நூறு முறை கூறிப் புரட்சிக்குக் கட்டியங்காரர்களாக நடந்து கொள்வதையும் பார்க்கிறோம். இன்னும் சிலர் குமரிக்கண்ட வரலாற்றையும். பஃறுளியாற்றின் கடல்கோளையும் கூட கூட்டங்கள் தோறும் எடுத்து முழக்கும் வழக்கம் கூடிவருகிறது. இவற்றுலெல்லாம் நமக்கு இரட்டிப்பான மகிழ்ச்சியே. நாம்தாம் சொன்னோம் செய்தோம் என்பதில் தமிழர்களுக்குள் போட்டியிருப்பதும், அவ்வினத் தாழ்ச்சிக்கு ஒரு காரணமே! நமக்கு வேண்டுவதெல்லாம், யார் குத்தி அரிசியானாலும் நல்லது என்பதுதான். இவையிவற்றை இத் தமிழினம் செய்து கொள்ள வேண்டும் என்பதுதான் நமக்கு முகாமையானது: அவற்றை யார் செய்கிறார்கள் என்னும் பொறாமைப் பார்வையன்று. வெறும் ஆரியம், திராவிடம் என்றும், திராவிட நாடு திராவிடர்க்கே என்றும் கூறப் பெற்ற பொழுதிலும்கூட, நாம் அவற்றை மறுத்துத் திராவிடம் என்பது சரியான கொள்கையன்று என்றும் தமிழம் என்பதும், 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்பதுந்தாம் வரலாற்று அடிப்படையில் சரியானதாகும் என்றும் எழுதியும் பேசியும் வந்தோம். 'தென்மொழி' தன்னை வெளிப்படுத்திக் கொண்டபொழுதே தனிநாடுக் கோரிக்கையைத்தான் முன் வைத்தது. அதன்பின் மற்ற அரசியல் கட்சிகள் எங்கெங்கோ சுற்றி மூக்கைத் தொட்டு வந்து. அக் கொள்கையால் விளைவு வரும் இந்நேரத்தில் நாம் தொடக்கத்தில் வரையறுத்த 'மொழியால் இனம். இனத்தால் நாடு' என்னும் மெய்ம்மத்தை உள்ளடக்கிய 'மொழி, இனம், நாடு' என்னும் நம் முப்படி முழக்கத்தைச் சிலர் ஏதோ தங்களின் மூலக் கொள்கையைப்போல் முழங்கத் தொடங்கியுள்ளனர். எஃது எவ்வாறாயினும், நம் முயற்சிகளால்

வரும் விளைவுகளுக்காகவே அனைத்து நிலைகளிலும், நாம் பொறுமையற்ற, வஞ்சனையற்ற, பயனைக் கூறுபோட்டுக் கொள்ளாத நடுநிலைப் பார்வையால் காலத்தை எதிர்பார்த்திருக்கின்றோம். இது நிற்க.

தமிழினத்தின் உண்மையான முன்னேற்ற முயற்சிகளை விரும்பும் நாம் அனைவரும், அவரவர்களுக்குச் சரியான வழிவகை என்று நாம் தேர்ந்தெடுத்துக்கொண்ட கொள்கைகளின் வழியில் பாடாற்றி வருகின்றோம். அவற்றுள், **"தமிழர்க்கென்று தனி நாடு தேவையில்லை; அவர்கள் இந்தியத் தேசியத்தில் இணைந்து விடுவதே அனைத்து நிலைகளுக்கும் நன்மை பயப்பது. தேசிய ஒருமைப்பாட்டைத் தவிர்த்துப் பிரிவினை பேசுவதால் பயனில்லை'** என்பது, வடவர்க்கும் பார்ப்பனியத்திற்கும் ஏற்கனவே தம் தம் சிந்தனைகள், செயல்கள் ஆகியவற்றை அடகு வைத்து விட்டு, அடிமைப் பட்டுப்போன தந்நலக்காரர்களின் கூற்று. இவ்விரண்டுங் கெட்டான்களின் அடிமைக் கொள்கையால், அத்தேசியக் கங்காணிகளுக்கே நன்மையாகுமன்றி, தமிழின மக்களுக்கு என்றைக்கும் ஓர் எள்ளளவும் நன்மையோ முன்னேற்றமோ கிடைக்கப் போவதில்லை.

அடுத்தபடி, பொதுவுடைமை என்னும் ஓர் உண்மையான இன முன்னேற்ற மெய்ம்மைக் கொள்கையின் பெயரால் போலித்தனமான அரசியல் குழுகாய நடவடிக்கைகளை மேற்கொண்டு, உருசியாவுக்கும் போகாமல், சீனுவுக்கும் செல்லாமல், இடையில் தில்லியிலேயே விழுந்து கிடக்கும், சாதி மதவுணர்வுகள் சாகா மனங்கொண்ட பொக்கைப் பொதுவுடைமைக் காரர்களால் தமிழினத்திற்கோ, தமிழ்நாட்டுக்கோ எவ்வகை விளைவும் எக்காலத்திலும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. இத்தகையவர்களின் பேச்சுக்கோ செயலுக்கோ எவ்வகைத் தொடர்புமில்லை. இந்த உலகம் அழியுமட்டும் இவர்கள் நின்று கொண்டிருக்கும் குழப்ப மேடையில் இருந்து இவர்கள் அகலப் போவதுமில்லை. இவர்களுக்கு ஒரு தேசிய இன உரிமை என்பதிலேயே தெளிவான கருத்து இல்லை. **'இந்தியத் தேசியம்'** என்னும் மாய்மாலக் கோட்டைக்குள் புகுந்து கொண்ட இவர்கள் வெளிவருவது கடினம்.

இனி, இவர்களையும் தவிர்த்து, இங்குள்ள சிலர் காலத்தால் நசுங்கிய காந்தியின் பெயராலும், கருமமே கண்ணாகக் கொண்ட காமராசரின் உழைப்பாலும், பேராய வெள்ளையடித்துக் கொண்டு, அவ்வப்பொழுது, தமிழ் என்று வாய்ச் சிலம்பமாடுவதும், தமிழர் நலன் என்று கைக்கம்பு வீசுவதுமாக, வெள்ளை ஊர்திகளில் வீதியுலா வந்து, தங்களின் சாதிக் கோட்டையின் வலிவான கதவுகளுக்குப் பின்னால் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். இவர்களால் இந்நாட்டில் ஊர்ந்து கொண்டிருக்கும் ஒரு சிற்றெறும்புக்கும் ஒரு சிறு அளவினும் நன்மையில்லை. இவர்கள் அள்ளிக்

கொடுக்கும் காசுகளுக்கு அங்காந்து திரியும் சாதிச் சாரணர்களே இவர்களின் ஐந்தாம் படைத் தொண்டர்கள்! இவர்களின் ஆரவாரக் கூப்பாடுகளில் இத்தலைவர்கள் மெய் மயங்கிக் கிடப்பதே இவர்களின் வாழ்க்கை. இவர்களின் பொய் மயங்கிய போலி உரைகள், இவர்கள் ஊரைவிட்டுப் போனதும், வெறுங் குப்பைக் காற்றுகச் செயலிழந்து போவதை அனைவரும் கண்டிருக்கலாம். இவர்களால் தமிழும் தமிழினமும் ஓர் இம்மி அளவாகிலும் முன்னேறும் என்பது ஊமையன் கண்ட ஒரு நொடிக் கனவே ஆகும்.

இனி, இன்னுரையும் அடுத்து, அன்று முதல் இன்று வரை, ஆட்சியைப் பிடித்தாலன்றி நம் இனத்திற்கு ஆவது ஒன்றுமில்லையென்று அறைகூவல் விடுத்து, இடையில் சிலகாலம் பதவி நலம் கண்டு சுவைத்திருந்தாலும், தமிழர் நலத்திற்கென்று அடித்தளமான ஓர் ஆக்கத்தையும் செய்யாமல், உருப்படியான ஒரு சிறு விளைவையும் உருவாக்காமல், பேச்சோ பேச்சென்று பேசி முழக்கியே வாணாளை வீணாளாக்கி இறுதியில் மனம் நொடிந்து ஊடாடிக் கொண்டிருக்கும் திராவிட இயக்கத்தின் தலைமைக் கூட்டமும், தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் இனிமேல் செய்வது ஒன்றுமில்லை என்றும், செய்தனவும் (!) செய்து வருவனவுமே (!) போதுமென்னும் முடிவுக்கு வந்துவிட்டதாகத் தெரிகிறது. இனி, இறுதி வாய்ப்பாகத் தங்களுக்கு ஆட்சிக்கட்டிலில் அமர ஒரு வாய்ப்புக் கிடைத்தால், திடுமென இவ்வினத்துக்குத் தன்னாலான அத்துணையும் செய்து விடுவோம் என்று வாயலப்பிக் கொண்டிருப்பது என்றுமே நிறைவேறி விடப் போவதில்லை.

'செய்தக்க அல்ல செயக்கெடும்; செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

—என்னும் செயலின் மாறுபாட்டிலக்கணத்திற்கு முழு இலக்கியமாகிய இவ்வியக்கம், இருமுறை பதவிக்கு வந்தும், இரண்டு நிலைகளாலும் கெட்டது. முதன்முறை செய்தக்க அல்லாதவற்றைச் செய்ததால் கெட்டதும், இரண்டாம் முறை செய்தக்க செய்யாமையாற் கெட்டதும் வேறு எவர்க்கும் விளங்காமற் போனாலும், அதன் வேளாண்மையாளர்க்கும் அறுவடையாளர்க்கும் விளங்கியிருக்கும். இனி, இடிந்த பழையநிலை, புதுப்பிக்கப் பெற்று, மணல்மேடு குடியிருப்பாக மாறும் என்பது அத்தைக்கு மீசை முளைத்தால் என்னும் கதையைப் போன்றதே! நெஞ்சு துணுக்குற்றாலும் உண்மையைச் சொல்லித்தானே ஆகவேண்டும். எனவே, ஆற்றொணாக் கவலையோடுதான் இக் கருத்தை இங்கே வெளிப்படுத்துகிறோம்:

அடுத்து, ஆட்சி மாளிகையை மக்களின் அறியாமை மேட்டில் கட்டிக்கொண்டு, கவர்ச்சி வண்ணம் பூசிக் கைம்மை நோன்பு நோற்று, ஊமை ஊரைக் கெடுக்கும்; பெருச்சாளி வீட்டைக்

கெடுக்கும் என்பதற்கிணங்க, மூங்கை நாடகமாடிக் கொண்டு, வீணான சாரவுணவுத் திட்டத்திலும், சாராயக் கிடங்குகளிலும், திரைப்படக் கூத்தாட்டங்களிலுமே சிந்தனையைப் போக்கி, எதிர்கால மக்கள் நலத்திட்டம் என்ற எண்ணமே இல்லாமல், அவ்வப்பொழுதைய ஆரவாரத்திற்கும், கொள்ளையடிப்புகளுக்கும் தக்கவாறு, வடநாட்டு அரசியல் வல்லாண்மைக் காரர்களிடமும், சுரண்டல் முதலாளிகளிடமும் பேரம் பேசி, ஊதியத்தில் பங்கு போட்டுக்கொண்டு சாப்பசி தணிக்கும் சதுர ஆட்டக்காரர்களின் பெரியாரிச, அண்ணாயிசக் கொள்கைத் திராவிடர்களுக்கோ, தமிழ் நலத்திலும் ஊற்றமில்லை; தமிழர் முன்னேற்றத்திலும் நாட்டமில்லை. அவர்கள் நினைப்பவையெல்லாம் இன்றைக்குக் கட்டி நாளைக்குச் சரிந்துபோகும் வெற்றாரவார வீணடிப்புத் திட்டங்களே! முதலமைச்சருக் கேற்ற துறையமைச்சர்கள்! துறையமைச்சர்களுக் கேற்ற முதலமைச்சர்! கடந்த ஈராயிரம் மூவாயிரமாண்டுகளாக விழுந்து கிடக்கும் இத் தமிழினம் இந்தச் சாராய வருமானத்திலா தலைதூக்கப் போகிறது? இவர்கள் நடத்தும் பரிசுச் சீட்டுத் திட்டத்திலா, முட்டுக்கொடுத்து நிறுத் தப்பட்டுவிடப் போகிறது?

வரலாற்றை யுணராத வாய்வீச்சுகள்! அறிஞர்களை மதிக்காத ஆரவாரப் பேச்சுகள்! வெறும் வாய்ப்புரளிக்காரர்களுக்கு வாய்க் கரிசி போட்டு, வீக்கத்தை ஆக்கம் என்றும், விழுந்தெழுவதை நடிப்பு என்றும், கெக்கலிப்பைக் கலையென்றும், கேடுகளை நலன்கள் என்றும் வெட்கங்கெட்ட விளம்பரங்களால் ஆட்சி வண்டி யோட்டிக் கொண்டிருக்கும், இவ் வாளுங்கட்சித் திரா விடங்களால், இவ் வேதுங்கெட்ட தமிழினத்திற்கு ஏதாவது உண் மையிலேயே முன்னேற்றம் ஏற்படுமா? அந்த மூகாம்பிகைக்கே வெளிச்சம்! மொழியின் அழிவைத் தடுக்கவும், அதனை வளர்த் தெடுக்கவும் வாய்ப்பை உருவாக்காத இவர்கள், அதனைச் சீர் திருத்தும் முயற்சிகளென ஏராளமான கோணல் மாணலான முயற்சிகளைச் செய்வதும், நான்காம் கழகம், ஆராய்ச்சிகள், அஃது இஃது என்றெல்லாம் வந்த வேகத்தில் உளறியவர்கள், நாளடைவில் அவற்றை மறந்துவிட்ட, அன்றாட அரசியல் ஆரவாரத்தில் ஊதியந்தேட முயல்வதும், இன முயற்சிக்கும் முன்னேற்றத்திற்குமென்று எதையும் அடியூன்றச் செய்யாமல், ஆரியத்திற்கும் வடநாட்டுப் பூரியத்திற்கும் அடிபணிந்து கிடப் பதும் கொடுமை! கொடுமையிலும் கொடுமை!

இனி எதிர்க்கட்சி ஆளுங்கட்சி மூஞ்சி முகரைகள் இவ்வா றிருக்க, இனங்காப்பதற்கென்றே எழுந்த இயக்கமாகத் தன்னைக் கூறிக்கொள்ளும் இயக்கந்தான், இத் தமிழினத்திற்கு ஏதாவது பயனுள்ள செயல்களைத் திட்டமிட்டுச் செய்கின்றதா எனில், ஐயகோ பெரியார் தொடங்கிய அப் பெரும்பயன் இயக்கமும் வெறு செயல்களிலும் வீணான விளம்பரங்களிலுமன்றோ தன்னை ஈடுபடுத்திக் கொண்டு தலைதடுமாறி பண வாணிக முதலாளி போல் வருவாயைப் பெருக்கிக் கொண்டு வறிதான முயற்சிகளில் ஈடுபட்டுக் கால அழிவு செய்து கொண்டு வருகிறது.

பகுத்தறிவு என்பதை இனமுயற்சியாக அவ் வியக்கம் அறிவிப்பதையும் 'கடவுள் இல்லை' என்பதை அதன் கொள்கையாகப் பரப்புவதையுமே அது செய்து கொண்டுள்ளது பெரிதும் வருந்தத்தக்கது. பகுத்தறிவு என்பது மாந்த இனத்திற்கே பொதுவான ஓர் அறிவு முயற்சி. தமிழின முன்னேற்றத்துக்கான தனி முயற்சியன்று அது அதுபோலவே கடவுள் இல்லை என்பதும் அல்லது இருக்கின்றது என்பதும் ஓர் அறிவுக் கொள்கையாகவும் இருக்கலாம்; அல்லது மூட நம்பிக்கையாகவும் இருக்கலாம். அதற்கும் ஓர் இனத்தின் அடிமை நீக்கத்திற்கும், அல்லது உரிமை மீட்புக்கும் எந்தவொரு தொடர்பும் இல்லை உலக உரிமை மீட்பு வரலாறுகளில் விடுதலை உணர்வுதான் செயல்பட்டு, அடிமைப்பட்ட இன முன்னேற்ற முயற்சிகளுக்குப் பயன்பட்டிருக்கின்றதே தவிர, பகுத்தறிவுணர்வோ இறைமறுப்புக் கொள்கையோ அல்ல. இக்காலும் உலகத் தேசிய இனங்கள் அத்தகைய கருத்துகளில் கவனம் செலுத்தாமல், உரிமைகளைப் பெறுவதற்கான போராட்டங்களையும் கருத்துகளை மக்களிடையில் பரப்புவதையுமே தம் இன முன்னேற்ற முயற்சிகளாகக் கொண்டு இயங்கி வருகின்றன. இனி, கடந்த காலத்தில் உருசியாவில் மார்க்சீயக் கொள்கையை முன்வைத்துப் பெரும் புரட்சிப் போராட்டங்களை நடத்தி, நாட்டை மீட்டுத் தேசிய இன முன்னேற்றத்திற்கு அடிப்படையான பொதுவுடைமைச் சமநிலைக் குடியரசை அமைத்துக் கொடுத்த இலெனின், எங்கல்சு போன்ற மேதைகளும், பகுத்தறிவையோ, இறைமறுப்புக் கொள்கையையோ தங்களின் இன மீட்புக்கும் அரசியல் அதிகார மீட்புக்குமான உத்திகளாகப் பயன்படுத்தவில்லை.

மேலும், தமிழினத்தின் முன்னேற்றத்திற்கு, முற்ற முடிந்த முடிபாகத் தமிழக விடுதலையே முதற் கொள்கையாகும். தமிழகம் விடுதலை பெற்றால்தான், தமிழினத்தின் அனைத்து முன்னேற்றங்களுக்கும் வாய்ப்பிருக்க முடியும். இவ் விடுதலை உணர்வை, இனவுணர்வாலேயே தட்டியெழுப்ப முடியும். இவ்வினவுணர்வையும், மொழியுணர்வாலேயே கட்டியமைக்க இயலும். வேறு நாடுகள் சிலவற்றில், ஒரே மொழி பேசும் மக்களே பிரிந்து கிடக்கின்றார்கள் என்பதும், அங்கெல்லாம் தாய்மொழியுணர்வு ஒற்றுமைக்குப் பயன்படவில்லை யென்பதும், வேறு வேறு அடிப்படைகளைக் கொண்ட வேறுவேறு செய்திகள் ஆகும். அவற்றை யெண்ணி, இனவெழுச்சிக்கு மொழி பயன்படாதென்பது சரியான கொள்கையாகாது, தமிழ்மொழியைப் பொறுத்த அளவில் அதன் வழிப் பிரிந்த திராவிட மொழியினங்களைக் கூட தமிழ் மொழியாலும் அதன் வழிப்பட்ட பண்பாட்டாலும் நாம் ஒன்று படுத்திவிட முடியும்.

ஏறத்தாழ 142 தேசிய இனங்களைக் கொண்ட உருசியாவிலும் 50 தேசிய இனங்களைக் கொண்ட சீனாவிலும், உருசிய மொழியையும், சீன மொழியையும் வைத்தே, அந்நாட்டு மக்களை ஒன்று படுத்தியிருக்கிறார்கள் என்பதையும், இந்தியாவிலும் ஏறத்தாழ 1700 மொழிகள் பேசப்பெறுகின்றன என்பதையும், இந்தியத்

தேசிய மொழிகள் 14-இலும் கூட, 380 வகையான தாய்மொழிகள் உள்ளடங்குகின்றன என்பதையும், இருப்பினும் இந்திமொழி ஒன்றையே இணைப்பு மொழியாகக் கொண்டு இந்தியத் தேசிய ஒருமைப் பாட்டை ஏற்படுத்த முனைகின்றார்கள் என்பதையும் நோக்குகிறபொழுது, மக்கள் இன ஒருமைப்பாட்டிற்கு மொழி எத்துணை முகாமையானது என்பது நன்கு விளங்கும். இம் முகாமையான மொழியுணர்வைத் தவிர்த்து விட்டுத் தமிழினத்தை வேறு எந்த உணர்வாலும் ஒன்றுபடுத்திவிட முடியாதென்பது, நம் அசைக்க முடியாத கொள்கை. தொழிலாளர், உழவர்களைத் தட்டியெழுப்பி, ஒரு பொருளியல் போராட்டத்தையோ புரட்சியையோ உருவாக்குவதென்றாலும் கூட, நம் தாய்மொழி உணர்வைக் கொண்டே அதைச் செய்ய இயலும்.

இவ் வடிப்படையில், எவ்வாறாகப் பார்ப்பினும், தமிழின உரிமைகளை மீட்காமல், நம் நாட்டை அரசியல், பொருளியல், குமுகாயவியல் அடிப்படையில் விடுதலை பெறச் செய்யாமல், எந்தவகையிலும் தமிழின முன்னேற்றத்தை ஏற்படுத்திவிட முடியாது என்பதை நாம் தெளிவாக விளங்கிக் கொள்ளுதல்வேண்டும். அதற்கிடையில் நாம் செய்யும் எந்த முயற்சிக்கும் அதுவே அடிப்படையாக அமைய வேண்டுவது மிகமிக இன்றியமையாதது.

— பெருஞ்சித்திரனார்

செல்வன் வெற்றி வாழ்க!

சென்னை, அண்ணாநகர், திருவாளர்கள் கலச இராமலிங்கம் இணையர் தம் இரண்டாம் குழந்தை செல்வன் வெற்றியைப் பள்ளியில் சேர்த்ததன் மகிழ்வு நினைவாகத் தென்மொழி வளர்ச்சிக்குக் கடந்த 5-6 85-ஆம் நாள் உரு 25/-ஐ நன்கொடையாக வழங்கியுள்ளனர். செல்வன் வெற்றி கல்வியிலும், வாழ்விலும் அனைத்து வெற்றிகளையும் பெற்றுப் பெயரும் புகழும் எய்த நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகிறோம். — அமைச்சர்.

சு. 21 ஓ. 8 - இல் ஒரு திருத்தம்!

தென்மொழி, சுவடி 21 ஓலை 8-இல், 9 ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள 'பெருஞ்சித்திரனார் போர்க்கொடியைத் தூக்கிவிட்டார்' என்னும் பாடலை எழுதியவர் பெயர். திரு: முத்து மாணிக்கம், சிங்கை என்பதைச் சேர்த்துப் படித்துக் கொள்ளவும்.

சிறப்பு மடல் :

தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் இந்தப் பணியைச் செய்தாலென்ன?

பெருமதிப்பிற்குரிய பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு,

பேரன்புடையீர், வணக்கம். நெடுநாட்களுக்கு முன்பு வங்க நாட்டு மொழியியலறிஞரான அமர்நாத் சட்டர்சி என்பவர் தமிழ் மொழிதான் உலகமொழிகளுக்கெல்லாம் தாய் என்பதைத் தமது ஆராய்ச்சியின் வாயிலாக நிறுவிக்காட்டி முனைவர் (டாக்டர்) பட்டம் பெற்றுள்ளார். அவரது இவ்வாராய்ச்சிக் கட்டுரையை அக்கால அரசு வெளியிட்டுள்ளதாம்! தமிழ்ப்பகைவர்கள் அதை அப்படியே இருட்டடிப்புச் செய்து விட்டனர். அமர்நாத் அவர் களது இவ்வாராய்ச்சி பற்றி நான் மட்டும் எனது 'தமிழ்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ளேன். இதுபற்றி வேறு எந்தத் தமிழ் அறிஞரும் எங்கும் குறிப்பிடக்காணோம். எனவே இதுபற்றித் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சுப்பிர மணியம் அவர்களுக்கு எழுதினேன். அவர் அமர்நாத் அவர்களது ஆராய்ச்சி பற்றி அனைவரும் அறிந்ததுதான் என்றும், அவரது ஆராய்ச்சி நூல் கிடைத்தவுடன் அதுபற்றி எனக்குத் தெரிவிப்பதாகவும் எழுதியிருந்தார்.

'அமர்நாத் அவர்களது ஆராய்ச்சிபற்றி அனைவரும் அறிந்ததே என்று சொல்லுகின்றீர்கள். ஆனால் இதுபற்றித் தமிழறிஞர்களுக்கே ஏதும் தெரியவில்லை. இதுபற்றிக் கலை இலக்கியத்தில் எதுவுமில்லை; மற்றும் தமிழறிஞர்களான, முனைவர் மு. வ, கா. அப்பாத்துரையார், பாவாணர் போன்றவர்கள்கூட இதுபற்றி எல்லாம் எதுவுமே சொல்லக்காணோமே அ'து ஏன் என்று கேட்டிருந்தேன்: அதற்கு இன்றுவரை அவரிடமிருந்து விடை ஏதுமில்லை. எவ்வளவு கடிதம் எழுதினாலும், இதற்கு விடையும் அந்த ஆராய்ச்சி நூல் கிடைத்ததா என்ற விளக்கமும் எழுத மறுத்து வருகின்றார்.

அடுத்தது, வரலாறு காணாத பழங்காலத்தில் இன்றைய மராட்டிய மாநிலம் முழுவதிலும் தமிழே வழங்கி வந்துள்ளது என்பதற்கான சான்றுகளை முதன் முறையாகக் கண்டுபிடித்துத் 'திராவிட மராட்டியர்' என்ற ஆய்வு நூலை மராட்டியில் எழுதியுள்ளார், விசுவநாத கைரே என்பவர். இதையும் தமிழ்ப் பல்கலைக் கழகம் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட வேண்டும் எனவும், தமிழ்ப் பல்கலைக் கழகத் துணைவேந்தரைக் கேட்டிருந்தேன். இதற்கும் இன்றுவரை அவரிடமிருந்து கடிதம் இல்லை.

துணைவேந்தர் முனைவர் அமர்நாத் அவர்களது ஆய்வு நூலை வெளியிட அஞ்சுகின்றார் போலிருக்கின்றது. எனவே எப்படியும் அந்த நூலைத் தேடிக் கண்டுபிடித்து அதனை வெளியிட ஆவன செய்யும்படி தங்களை வேண்டிக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தமிழன், சதாசிவம், கோயமுத்தூர்-2

அரிமா வளங்கோ !

தனராச சென்னும் தன்பெயர் தவிர்த்தே
இனமொழி, நாட்டை யாவினும் உயர்த்த
அரிமா வளங்கோ என, அரும் பெயரை
உரிமை ஆக்கிய உரவோன்! 'புதுவை மொழி'
தொடங்கிய பொழுதில் தோள்தந் தியங்கி
முடங்கிய பொழுதில் முழுத்துணை நின்று,
நாளுங் கிழமையும் நடுநடு வந்து
வாளெனக் காத்து வருபொருள் உரைத்துப்
புதுவை வாழ்ந்த பொழுதெலாம் உழைத்தோன்!
எதுநான் எண்ணுவேன் அதுசெய லாக்கி,
ஆர்வ இளைஞர் அரிமா கழகத்தை
நேர்வுற வைத்து நிழல்போல் இருந்து,
'சுடமா' மலரினைச் சீருற வாக்கிய
மற்போர் மல்லன்! மதிநிறை குணத்தன்!

அருளியை ஆற்றுப் படுத்திய அறிஞன்!
மருளிலாக் கொள்கையன்! மாறிலா வினைஞன்!
குளிர்முகங் கோணுக் குன்று அன்பினன்!
ஒளியுமிழ் கண்ணும் உரைதவழ் வாயும்
தீதிலா நெஞ்சும் தீந்தமிழ் உணர்வும்
கோணிலா நடையும் கொள்கைச் செருக்கும்
வாய்ந்த உயிரினன் !

வாழ்விடம் மாற்றி
ஆய்ந்த தமிழுக் காக்கம் தந்த
பிரஞ்சுப் பெருநா டேகிப் பிரிந்தும்
நறுஞ்சுவைத் தமிழின் நசைமா றாமல்
அன்புத் தமிழர்க்கு ஆர்வம் கொளுத்தி
என்புந் தசையும் இயக்கமும் தமிழென
உலாவரும் உரவோன்! உலகத் தமிழினம்
அளாவும் முன்னேற்றக் கழகம் அமைத்தே
எனைமற வாமல் எண்ணருஞ் செல்வம்
தனையிறைத் தென்னைத் தாவி வருகென
அழைத்து விழாவெடுத் தமிழா நறும்புகழ்
உழைத்துப் பெற்ற உண்மைத் தொண்டன்!

இன்னருந் துணையோ டேழு குழந்தைகள்
நன்னர் பொருந்திய குடும்ப நயப்பினன்!
அவ்வப் பொழுது தென்மொழிக் கருங்கொடை
ஒவ்வக் கொடுத்த உளங்கொள் பெருந்தகை!
கொப்பொடுங் கிளையொடும் கொழிக்க
எப்பொழு தும்குடி ஏற்றமுற் றுயர்கவே!



நூறாசிரியம்

பெருஞ்சித்திரன்

பாட்டு : ௬௧

இவளே,
பாரிய கூந்தல் புழுதி துவையத்
தலைதரை கிடத்தியும் எழுந்துமார் பெற்றியும்
செவ்விழி உகுநீர் நனைவாய் அரற்றியும்
எரியுண் மூங்கில் இணைகொடி யாகி
இனித்துணை யறியா இவனிள மனையே!
இவரே,
தந்தை கொள்கை தாமறி கல்லா
அன்னை அழுங்கல் ஆற்றுதல் அறியாது
எதிர்ந்த சூழலுக் கதிர்ந்த நெஞ்சொடு
விசித்தழா நின்ற இவன்மூ மகாரே!
இவனே,
வடவர் திணித்த வளரா மடமொழி
கடியத் துணிந்து காட்சியின் காட்ட
உடலந் தீக்கொள உயிர்தீந் தமிழ்க்கெனக்
கொள்கை முழக்கிய குரிசில்
விருகாம் பாக்கத்து அரங்க நாதனே!

பொழிப்புரை :

(இவள் யார் என்குவிராயின்) இவளே, பரந்த கூந்தல் புழுதியில் தோயவும், தலையைத் தரையில் கிடத்தியும், பின் எழுந்து மார்பில் அடித்தும், சிவந்த விழிகளிலிருந்து உகுக்கின்ற கண்ணீரில் நனைகின்ற வாயால், அரற்றி அழுதும், எரியால் உண்ணப்படுகின்ற மூங்கிலைப்போல், நெய்யை ஊற்றிக் கொண்டு தீயால் பற்றியெரிந்து உண்ணப்படுகின்ற இவள் கணவன்மேல் இணைந்து பற்றியிருந்த கொடியாகி, இனிமேல் ஒரு துணையும் அறியாத இவனுடைய இளமை பொருந்திய மனைவி; (இவனருகில் நிற்கிற) இவர்கள், தந்தையினது கொள்கை நெறியைத் தாங்கள் அறிய முடியாதவர்களாகத் தங்கள் அன்னையினது அழுகையையும், ஆற்றுகின்ற தன்மையும் அறியாமல், ஏற்பட்ட இச்சூழலுக்கு அதிர்ந்துபோன நெஞ்சுடன், விசித்தழுது நிற்கின்ற இவனுடைய மூன்று மக்கள்! (இதோ, எரியால உண்ணப்பட்டுப் பிணமாய்க் கிடக்கின்ற) இவன், வடவர் திணித்த வளராத மழுங்கல் மொழியாகிய இந்தி மொழியைக் கடிந்து தடுப்பதற்குத்

துணிந்து நின்று, அவ் வுணர்வைக் காட்சின் அளவில் காட்டுதற்கு, உடலில் தீக்கொளுவிக் கொண்டு, தன் உயிர் தீந்தமிழுக்கெனக் கொள்கையை முழுங்கிய சிறந்த வீர மகனாகிய, விருகாம்பாக்கம் என்னும் அரங்கநாதனை, ஆவான்.

விரிப்பு: இப் பாடல் புறத்துறையைச் சார்ந்தது.

இதுவும், முந்தைய பாடல் காலத்து நடந்த வியப்புக்குரிய ஒரு செயலைப் பாராட்டியதாகும்.

இந்தி யெதிர்ப்புக்காக, தீக்குளியல் செய்த விருகாம்பாக்கத்தைச்சேர்ந்த அரங்கநாதனைப் பாடியது.

பாரிய: பரந்த
புழுதி துவைய: புழுதி தோயும்படி தரையில் புரள,
தலைதரை கிடத்தியும்: தலையைத் தரையில் மோதி முட்டி அழுதல்,
மார்பு எற்றுதல்: மார்பில் கைகளால் அடித்துக்கொண்டு அழுதல்.
செவ்விழி உகுநீர் நனை வாய் அரற்றி: அழுது சிவந்த விழிகளிலிருந்து, உகுகின்ற கண்ணீரால நனைந்த வாயால் புலம்பி அழுது.
எரியுண் மூங்கில் இணைகொடி யாகி: எரியால் உண்ணப்பட்டு எரிந்து கொண்டிருக்கின்ற மூங்கில் மேல் இணைந்து சுற்றிய கொடி எவ்வாறு அதுவும் கருகிக் குலைந்து போகுமோ, அவ்வாறு குலைந்து நிற்கின்ற கொடி போன்றவள் ஆகி.
இனித் துணை யறியா: இனிமேல், வாழ்வுத் துணை யறியாத,
தந்தை கொள்கை: தங்கள் தந்தையின் கொள்கையாகிய இந்தி யெதிர்ப்பை,
தாமறிகல் லாது: தாங்கள் அறியாமல்.
அழுங்கல் ஆற்றுதல்: அழுகையைத் தேற்றி அடக்குதல்,
எதிர்ந்த சூழல்: இக்கால் ஏற்பட்டிருக்கின்ற சூழ்நிலை.
அதிர்ந்த நெஞ்சொடு: அதிர்ச்சி யடைந்த உள்ளத்தொடு.
விசித்தழா நின்ற: தேம்பியழுது நிற்கின்ற.
இவன் மூ மகார்: இவனுடைய மூன்று மக்கள்.
வடவர் திணித்த வளரா மடமொழி: வட நாட்டு ஆட்சியினர் தெனாட்டு மக்கள்மேல் திணித்திருக்கும், வளர்ச்சியுறாத மூடமொழி. அறிவாற்றல் இல்லாத மொழியாகிய இந்திமொழி,
கடியத் துணிந்து: (இந்தி மொழித் திணிப்பைக்) கண்டித்துத் தடுத்து நிற்கத் துணிவு கொண்டு,
காட்சியின் காட்ட: தன் உணர்வைக் காட்சியளவாகச் செயலில் காட்டுதற்கு.
உடலம் தீக் கொள: உடலில் கன்னெய் (பெட்ரோல்) ஊற்றிக் கொண்டு தீப் பற்றும்படி செய்து
உயிர் தீந்தமிழுக்கு என: தன் உயிர் தமிழுக்காகவே இருந்தது; இக்கால் அதற்குத் தீங்கு வந்ததால் அதற்காக அது மாய்ந்தது என எண்ணும்படி.

குரிசில் : சிறந்த வீர மகன்; ஆண் மகன்; தலைவன்.

விருகாம் பாக்கத்து அரங்க நாதன் : சென்னையில் உள்ள விருகாம் பாக்கம் என்னும் ஊரில் தோன்றிய அரங்கநாதன் என்னும் பெயரினன்.

கடந்த 1965 ஆம் ஆண்டு நடந்த இந்தியெதிர்ப்புப் போராட்டத்தைப் பற்றியெழுந்த பாடல் இது.

முந்தைய பாடல்களில் முழு வரலாற்றையும் கண்டுகொள்க.

தன் இளம் மனைவியையும், மூன்று மக்களையும் பொருட்டெனநினையாது, இந்தித் திணிப்பால் தமிழ் மொழிக்கு நேர்ந்த தீங்கையே பெரிதென நினைந்து, அத் தீந்தமிழ் மேல் தான கொண்ட பற்றினைக் காட்டுதற்கும், இந்தித் திணிப்புக்குத் தன் எதிர்ப்பை வெளிப்படுத்துதற்கும், தன்மேல் கன்னெய்யை ஊற்றித் தீ வைத்துக்கொண்டு, "உடலைத் தீயினுக்கும், உயிரைத் தமிழ்க்கும் தந்தேன்" என எழுதி வைத்துவிட்டு, மாய்ந்துபோன, விருகம்பாக்கத்தைச்சேர்ந்த அரங்க நாதன் என்னும் வீரனைச்சுற்றி யிருந்தார் கேட்கப் பாடியதாகும், இப் பாடல்.

இப் பாடல் முன்னது திணையும், கன்னெய்யாடல் என் துறையும் என்க.

திணையும் துறையும் புதியன.

செய்திகள்

சிந்தனையாளர் பேரவை—அணுவாற்றல் நகரியம் — கல்பாக்கம்—சிந்தனை வகுப்பு-3.

கடந்த 7—5—85-ஆம் நாள் மாலை 5·15 மணி அளவில், திருக்கழுக்குன்றம் வட்டம், கல்பாக்கம் அணுவாற்றல் நகரியத்தில், சிந்தனையாளர் பேரவையின் 3 ஆம் சிந்தனை வகுப்பு, புதுப்பட்டினம், ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் நடைபெற்றது. வகுப்புத் தொடக்கத்தில், அறிமுக வுரையை, நீண்டநாள் தென்மொழியன்பரும், தூய தமிழ் திருக்குறள் நெறியாளரும் ஆகிய திரு. வ வேம்பையன் அவர்கள் நிகழ்த்தினர்கள். அதனையடுத்து திரு. வே. திருவள்ளுவன் வரவேற்புரை நிகழ்த்தினார். அதைத் தொடர்ந்து, 'திருக்குறள் ஓர் இன நல நூல்' என்னும் தலைப்பில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் ஏறத்தாழ ஒன்றே முக்கால் மணி நேரம் சிறப்பு வகுப்பை நடத்தினார். அவர்கள் கருத்துரையாற்றுகையில், திருக்குறள் எவ்வாறு தமிழினமும், தமிழ்ப் பண்பாடும் அழியத் தொடங்கிய நிலையிலும், தமிழ்நாடு அடிமை கொள்ளப்பட்ட நிலையிலும் தோன்றி, அவற்றைக் கட்டிக்காத்தற் பொருட்டும், அடிமை மீட்கப்படவேண்டிய நிலையிலும் வெளிப்பட்ட நூல் என்பதைப் பல்வேறு சான்றுகளுடன், வந்திருந்த இளைஞர் கூட்டம் மனங்கொள்ளும் வகையில் எடுத்துக் கூறினார். இவ்வகுப்பு அனைத்து நிலையிலும், சிறப்புற்றிருந்ததாக வந்திருந்த இளைஞர் அனைவரும் பேசிச்சென்றது குறிப்பிடத்தக்கது.

மொகஞ்சோதோரா, அரப்பா எழுத்து முறைகள் தமிழர்களுடையனவே!

—போலந்து நாட்டு மொழியியல் அறிஞரின் ஆய்வு—

தென்மொழிக்கென்று சிறப்புக் கட்டுரை வழங்கியவர் :

டா. பேனன் (Dr. Benon)

போலந்து (Poland)

1966-ஆம் ஆண்டு முதல், பழைய வரிவடிவ அமைப்புகளில் அமிழ்ந்திருக்கின்ற புதிர்களை வெளிப்படுத்தும் பெருஞ்சிக்கலான பணியில் ஈடுபட்டுக்கொண்டு வருகிறேன், நான். அந்நிலையில், 'அறிந்து தெளியாத மிகப்பழைய எழுத்துகள், மொழிகளின் உள்ளடக்கப் புதிரின் வெளிப்பாடு' (Decipherment and Interpretation of ancient Inscrptions in Unknown scripts and Languages) எனும் தலைப்பில் நான் எழுதிய ஆய்வு நூல் 1984-ஆம் ஆண்டு போலந்து, செக்சியனில் (Szczecin) உள்ள தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தால் ஆங்கிலத்தில் வெளியிடப்பெற்றது. கி.மு. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய கிரந்த எழுத்துகளும் (பெயிசுடோசு தகடும், கிரந்த வரிவடிவமும்) பைபிளியன் முந்தைய வடிவமும் (கி.மு. ஈராயிரம் ஆண்டிற்கு முந்தையது) பற்றிய ஆய்வுகளின் விடைகள் அந் நூலில் இடம் பெற்றிருந்தன. அவ் வகையில் எம் ஆய்வு நூலில் இடம் பெற்ற ஆய்வு நிலை என்பது பொதுவான மொழியியல் கோட்பாட்டிலும் அதன் முறைகளிலும் உள்ள சில கருத்துகளின் அடிப்படையிலிருந்து பகுத்தெடுக்கப்பெற்றனவாகும். அங்ஙனம் செய்யப்பெற்ற அவ் வாய்வு 'பலநிலை ஆய்வு' (அ) பலநிலை விளக்கம் (Multi-level analysis) எனப் பெயர் சூட்டப்பெறுகிறது.

இவ் வகையில் பழைய இந்திய (மொகஞ்சோதாரா, அரப்பா) இவ் வரி வடிவமைப்புத் தொடர்பான ஆய்வுக்காகக் கடந்த ஆண்டு (1984) சூன் திங்கள் முதல் அக்தோபர் திங்கள் வரை நான் காலத்தை இழக்க நேரிட்டது. 1984-அக்தோபர் மாதமே அவ் வகை வரிவடிவமைப்புகள் தொடர்பான புதிர்களை வெளிப்படுத்துகிற நிலையில் உறுதியான முடிவுக்கு வரமுடிந்தது. அம் முடிவைக் கொண்டு போலந்து செக்சியனில் உள்ள மேல்நிலை ஆசிரியர் பள்ளியில் நான் வெளிப்படுத்திய கருத்துகள் அக்தோபர் 18-ஆம் பக்கல் வெளியிடப்பெற்றன. 'போலந்து அறிவியற் கழகத்' தலைவரிடத்தில் இக் கண்டுபிடிப்புகள் தொடர்பாகத் தெரிவித்திருந்தேன். அதன்பின்னர் இரு போலந்து செய்தியிதழ்கள் (கூரியர் செக்செக்கின்சுகி (Kurier Szczecinski)-14-12-'84 அன்றும், மோர்சு இசியாமியா (Morze E Zhiamia- 19-12-84) -இலும் இச் செய்தியை வெளியிட்டிருந்தன. அவ் வகையில் அப் பழைய இந்திய வரிவடிவமைப்புத் தொடர்பானமுழு முடிவுகளாக நான் வெளியிட்டிருந்த தீர்வுகள் கீழ்வருமாறு :

1. எழுதுமுறை என்பது வலப்பக்கத்திலிருந்து இடப்பக்கம் நோக்கியே அமைந்திருந்தது.

2. நூறு குறியீடுகளுக்கும் குறைவான அளவிலானதைக் கொண்டதாகவே எழுத்து முறை அமைந்திருந்தது.

3. ஒவ்வொரு வடிவமைபபும் கொண்ட குறியீடுகளும் முழு அசை (Syllable) யினதாக இருந்தன.

(எ. கா.)

4. சில கூடுதலான குறியீடுகள் (சிறிய மேல் வரந்தை சிறு கீரல்) அமைப்பதன் வழி ஓர் அசையின் அல்லது எழுத்தின் ஒலியமைப்பு மாற்றி அமைக்கப்பெற்றது. சுவ் வகையில் சிறு கீரல்கள் அச் சொல்லை ஒரு முழுமையான உயிர்மெய்ச் சொல்வாக மாற்றியது. சிறிய மேல் வரந்தை நீண்ட ஓசை கொண்ட அவ் வசையை (அ) எழுத்தை ஒலி நிலையில் குறைத்து வழங்கியது.

(எ. கா.)
சிறு கீரல் இடப்பெற்றது:



சிறிய மேல் வரந்தை
இடப்பெற்றது:



5. பல நிலைகளில் பழைய இக் குறியீடுகளின் ஒலிப்பு மதிப்பு திராவிட மொழிகளில் குறிப்பாகத் தமிழ் மொழியில் முதல் அசையாக இணைந்து பொருள் மாறாமல் வழங்குகிறது.

(எ. கா.)

sign	phonetic value	name of the sign	Tamil word
	MA	tree	MARAM
	KU	crab	KURATU

6. இந்நிலை இப்பழைய இந்திய வரிவடிவமைப்பு என்பது சில திராவிட மொழி பேசும் மக்களால்தாம் கண்டு பிடிக்கப்பெற்றது அல்லது பயன்படுத்தப் பெற்றது என்பதை உறுதிப்படுத்துகிறது.

7. பழைய இந்திய வரிவடிவங்களின் சொல் அல்லது மொழி திராவிட மொழிச் சொற்களே என்பது ஐயத்திற்கிடமில்லாமல் இருக்கிறது. பெரும்பாலான இந்தியச் சொற்கள் தமிழ்ச் சொற்களாகவே உள்ளன.

(எ. கா.) பழைய இந்திய நிலைக்கு முந்தைய மொழி: } MILLI, KOO, LIPI

தமிழ் :	MILLI, KOO, LIPI
ஆங்கிலம் :	King, King, destiny

8. மேலும் பல நிலைகளிலும் அவை ஒத்திருக்கின்றன:

கடவுள் பெயர் நிலையில்:

முந்தைய இந்திய கடவுள்		தமிழ் மற்றும் இந்துக் கடவுள்
KA-LI	...	காளி
NA-KA	...	நாகம், நாக
KA-MA	...	காம
WI-TO	...	விட்டு(ணு)
WI TE-NU-NU	...	விட்டேனியன்
WA-LA	...	வாலா, வெல்
WI LI	...	வில்லி
WE MA-LI	...	வேமாலி
WE-TA-LI	...	வேதாளி
WE MA-LI-SA	...	வீமலோசனை
YA-LI	—	யாளி
YA-KA	—	யாக

வழிபாட்டு அழைப்புச் சொற்கள்:

இந்திய முந்திய நிலை		திராவிடம்		ஆங்கிலம்
WA-L-MII-KU-L	—	வெல்மிக்கு	—	Wel's Glory
NA-WE-TA-LI	—	நாவேதாளிரு	—	Splenid
KA-NA-KA	—	கா நாகம்	—	Protective Naga

அரசப் பெயர்கள்:

Mipitali
Misipiyali
Waku

9. அவ்வகையில் பொருப்பேற்று அமர்ந்த நிலையிலிருக்கும் கடவுள் பெயர்கள் திராவிட மொழிச் சொற்களுடன் ஒத்திருப்பது போன்று அரசனைக் குறிக்கும் சொற்களும் பொருளுடன் ஒத்திருக்கின்றன.

பழைய இந்திய வரி வடிவம் : KU-KU L, MI-LI,

தமிழில் : KUKKU - 'to squat' - அமர் நிலை
MILLI - 'King' - அரசன்

10. என்னுடைய ஆய்வின் முக்காமையான விளக்கம் முந்தைய இந்திய வரிவடிவமைப்பின் மிக நீண்டதாக குறிக்கப்

பெற்றிருந்த 'பிரிசுமேடின் அமுலெட்' ஆகும். (முந்தைய இந்திய வரிவடிவமைப்புகள் தொடர்பாக ஏரசுனி (B HRONY) வரிசைப்படுத்தி யிருந்ததில் 137 - ஆம் எண்ணுடையது.) அ'து இடமிருந்து வலம் நோக்கி எழுதப்பெற்றது (இக்காலத் தமிழும், ஆங்கிலமும் எழுதப் பெறுகிற நிலையில்)



இதில் உள்ள விளக்கம்:

"To escape the destiny is foolish game,
the imagined distiny is a debt to be paid".

''ஊழியினின்று தப்பிப்பது என்பது முட்டாள்தனமான விளையாட்டு, கற்பனையான ஊழ் என்பது செலுத்தப் பெறவேண்டிய கடனாகும்''.

"தென்மொழி"

சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்
ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல்நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம் :	15 உருபா	35 உருபா	40 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	25 ,,
தனியிதழ் :	1.25 ,,	3-00 ,,	4.00 ,,

ஓரிதழுக்கு உருபா 2-50 மேனி முன்பணம்
கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

உரிமைத் தமிழகம்!

— கடலூர். மணிமாறன்

உறங்கிக் கிடந்திடும் மக்களை யானும்
உசுப்பி யெழுப்பவே துடிக்கிறேன்—அந்நாள்
பிறங்கிய பெருமைகள் பழம்பாய் போலப்
பிய்ந்திட நெஞ்சம் வெடிக்கிறேன்!

தோல்விக ளொருங்கே தொடர்ந்தெனைச் சூழினும்
சோர்வினால் உள்ளம் துவண்டிடேன்—பல
கேள்விகள் கேட்டெனைக் கீழ்மையாய்ச் சாடியே
கேடுகள் விளைக்கினும் கவல்கிலேன்!

என்மொழி என்னினம் உய்ந்திட உயர்ந்திட
இயன்றதை எப்போதும் செய்குவேன்—சிறு
நன்மைஎன் றாலேஇந் நாட்டுக்கு விளைந்திடின்
நத்திடும் பழியினின் றுய்குவேன்!

பாலுக்குப் பூனையைக் காவலாய் வைத்திடும்
பழிச்செயல் பெருகிடப் பார்க்கிறேன்—ஒரு
வேலியைத் தாண்டியே விலங்குகள் மேய்வதென்
விழிகளில் தெரிவதால் ஆர்க்கிறேன்!

ஆயிரம் ஆயிரம் இழிவுகள் வந்தெனை
ஆளுமை செய்யினும் அஞ்சிடேன்—இங்கு
வாயிலி மாக்களின் வாழ்வைச் சிதைத்திடும்
வன்கணர் முன்னர்நான் கெஞ்சிடேன்!

என்று திருந்துமிவ் வேழை உலகமென்
றேங்கித் துயரினில் உழல்கிறேன்—செய்த
நன்றி மறந்துமே தன்மை இகழ்ந்திடும்
நச்சுப் பரவிடச் சுழல்கிறேன்!

குற்றம் புரிவதே கொள்கையாய்க் கொண்டவர்
கொழுத்துத் திரிந்திடக் காண்கின்றேன்—தன்னை
முற்றும் மொழி, இன நாட்டுக்கே ஈந்தவர்
மூச்சிழந் தொடுங்கிட நோகிறேன்!

கோழைகள் எல்லாம் வீரர்கள் போலவே
குதிக்கிற காட்சி தெரிகிறது—இங்கு
ஏழைகள் வாழ்வை ஏய்த்துப் பறிக்கிற
இடக்கர்கள் ஈரவோ தொடர்கிறது!

கயமைகண் டுள்ளம் கனன்றிடும் இளைஞர்கள்!
கடமைகள் ஆற்றிட வருகவே!—வாழ்வில்
உயர்வுகள் விளைந்திட உரிமைத் தமிழகம்
ஒளிர்ந்திட வாழ்வினைத் தருகவே!

தொடர் நாடகம்

கொய்யாக்கனி

நாடக ஆக்கம்: அதியமான்.

முன்னுரை :

'உலகை ஆள்வது பொருளாயின்
உள்ளத்தை ஆள்வது ஒழுங்கே'

கொய்யாக்கனி பாவியத்திற்காக எழுதிய என்னுரை என்ற தலைப்பில்; பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் எழுதியதில் குறிப்பிடப்பட்டுள்ள சிறந்த வரிகள் தமிழர்கள் உயிரைவிட ஒழுக்கம் சிறந்தது என்றெழுதிய வாழ்க்கை முறைகளைக் கற்பிக்க நன்னெறிகளை எழுதித் தமிழர்களை வழிப்படுத்தினார். ஒழுக்கக் கேடுகள் குமுகாயத்தில் நடந்தால், அவற்றைச் சுட்டிக்காட்டித் திருத்த முயலும் அறிஞர்களில், சிறந்தவராய், ஒழுக்கம் பற்றிப் பேசுவது போலத் தம் வாழ்வியலிலும் நடந்து காட்டுபவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள். அவர் எழுதிய பாவியமே கொய்யாக்கனி.

ஐயா அவர்கள் எழுதிய பாவியங்களில் என் கையில் கிடைத்த இரு பாவியங்களில் 'ஐயை' ஒன்று; இன்னொன்று 'கொய்யாக்கனி' இதை எனக்கு இலக்கியமாகத் தந்தார்கள். 'ஐயை' என்ற பாவியத்தை நான் வில்லிசையிலெழுதி பாவலரேறு அவர்களின் தலைமையிலேயே அரங்கேற்றி மகிழ்ந்தேன். இவ் வில்லிசை நிகழ்ச்சியை நெல்லை மாவட்டம் 'தச்சநல்லூர் செல்வத்தாயம்மாள் குழுவினர்' இயக்கி வருகிறார்கள்.

அறிஞர்கள் நூல் வடிவில் எழுதியதை யாவரும் படித்து அவற்றின் சாரங்களை அறிந்து கொள்ள முடியாது. என் நுகரறிவிற்கு எட்டியதில் பல நூல்கள் யவராலும் புரட்டிக்கூடப் பார்க்காமல் தூசு படிந்து இருப்பவற்றைப் பார்த்திருக்கிறேன். எனவே ஐயையின் சிறந்த பண்புகளின் சிறப்பியல்புகளைக் கல்லாரும் அறிந்து இன்புற வேண்டும் என்ற ஆவலில் அதனை வில்லிசையில் வடித்தேன். ஐயையின் ஒருதலைக் காதல் நிறைவேறாமலே போனது. ஐயை தன் தாய்மாமனின் மகன் செம்மலை முழு உள்ளத்தோடு காதலித்தாள். எப்படியும் அவனை அடைந்து கணவனும் மனைவியுமாக வாழ்ந்து விடலாம் என்று கனவு கண்டாள். அவனோடு அன்பாக வாழும் முறைகளைக் கற்பனை செய்து மகிழ்ந்ததைத் தவிர அவனோடு வாழமுடியவில்லை. ஐயையின் காதல் பண்புகளை நினைக்கும் போதெல்லாம், அப்பப்பா என் உள்ளம் நீராக உருகி ஓடுகிறது. அவளின் அவலநிலை தமிழ் உணர்ந்தோர் உள்ளத்தை நெகிழவைக்கும். ஐயை நூலைத் தமிழர்கள் உயிராகக் காக்க வேண்டும். இன்னுஞ் சொல்வதானால் அதனை நாடகமாகக்கூட எழுதி நடித்து மக்களுடைய உள்ளத்தில் தமிழ்ப் பண்புகளை ஊன்றி நிற்கச்செய்வது மிக்க

நல்லது. ஐயையின் பண்புகளைப்பற்றி எழுதுவதானால் எத்தனை நாள்களுக்கும் மடிமையின்றி எழுதிக்கொண்டே இருப்பேன். அந் நூலை வாங்கிப் படிப்பவர்கள் அதன் உண்மையை உணர்வர்.

இரண்டாவதாக, கொய்யாக்கனியை நாடகமாக எழுதத் துணிந்தேன். அப் பாவியத்தில், குமுகாயத்தில் நடைபெறும், ஒழுக்கக்கேடுகளை எடுத்துக்காட்டி, அவை நாட்டில் இருத்தல் கூடா என்பதைச் சுட்டிக் காட்டுகிறார் ஐயா. மக்களை நன்னெறி நடக்க வழிப்படுத்தும் முயற்சியில் நிற்கிறது இந்நூல். இப் பாவி யத்தலைவி வள்ளியைக் கற்பழிக்க முயலும் கருப்பன் தோல்வி அடைந்துவிடுகிறான். இக் காட்சியில் பெண்ணின் உறுதியையும், தன்னைக் காத்துக்கொள்ளும் திறத்தையும் காட்டுகிறார்கள். அத் தவறு செய்த கருப்பன் தற்கொலைசெய்து கொண்டு சாகிறான். தவறிழைத்தோன் அழிவது உறுதியென கதை முடிகிறது. நல்ல முடிவு.

கொய்யாக்கனி பாவிய வடிவில் உள்ளது. பாவியம் படிப் போர் குறைவே. எனவே யாவரும் இக் கதையைப் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் நாடகமாக்கித் தருகிறேன். இதனை நடித்து மக்களைக் காண வைக்கவும் ஆவல். தமிழர்களுடைய பண்பாட்டு ஒழுக்கங்கள் எங்கேயோ போய்விட்ட இக் காலத்தில் இவ்வாறான நாடகம் தேவை.

இந் நாடகம் பாவியத்தின் போக்கில் போனாலும் சில காட்சி களில் இக்காலச் சூழல்களையும் அங்கங்கே தொட்டுக் காட்டி இருக்கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சியில் என் போன்றோர் செய்யும் சிறு முயற்சியை ஊக்குவிப்போர், பாவலரேறு அவர்களைத்தவிர வேறு யார் உளர், கூறமுடியுமா ?

ஆல் தன்னைத் தாங்கிக்கொள்ள அல்லது தான் நிலம் முழு வதும் படர்ந்து செழித்து வளர விழுதுகளை விடுமேதவிர, தன்னைப்போன்ற இன்னொரு மரத்தை அண்மையில் வளரவிடாது. அதுபோலத்தானே தமிழறிஞர்கள் பலர் தொண்டர்களை வைத் திருக்கின்றனர். அப்படியல்லாமல் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பல தமிழறிஞர்களை வளரவிட்டிருக்கிறார்கள். அவர் களின் திறங்கண்டு மகிழ்கிறார்கள். இதனை அவரால் உருவாக்கப் பட்டவர்கள் நினைக்காவிட்டாலும் இந் நாடறியும்.

ஒரு பெரும் தமிழறிஞர் எழுதிய பாவியத்தை நாடகமாக எழுத எனக்குக் கிடைத்த இப்பேற்றை என்றைக்காவது கனவிலும் நான் கண்டது கிடையாது. பெருமைப்படுகிறேன். இந்நாடகத்தை எழுதுவதற்கு என்னை ஊக்குவித்து வழி நடத்தும் பாவலரேறு அவர்களை வணங்கி என் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடகத்தைப் படியுங்கள்,

உறுப்பினர் : 1. கிழவர் (வள்ளியின் தாயைப் பெற்றவர்)
2. கண்ணையன்.
3. வள்ளி.

இடம் : பூந்தோட்டம்

நிலை : பூந்தோட்டத்தில் மலர்களைப் பறித்துக் கொண்டு இருமிக் கொண்டே பேசுகிறார், கிழவர்.

கிழவர் : இந்தப் பூக்கள் காட்டும் அழகையும், இம் மலர்களி லிருந்து வீசும் மணக்காற்று தரும் இன்பத்தையும் தவிர, நான் வேறு ஓர் இன்பத்தையும் இவ்வுலகில் நுகரவில்லை. பிள்ளைகளைப் பெற்றவன் பெருமையடைவான் என்ற சொல்லைக் கேட்டிருக்கிறேன். நானும் பெற்றேன், ஒரே ஒரு பெண்ணை! கண்ணைக் காப்பதுபோல வளர்த்தேன். ஒருவன் கையில் பிடித்துக்கொடுத்தேன். வள்ளி பிறந்தபின் இரண்டு பேரும் சாகவேண்டுமா? பிள்ளையைப் பெற்று என்ன பெருமையடைந்தேன்? (இருமிக் கொண்டு) ங்... வள்ளி! வள்ளி (சிறு சலிப்புடன்) அவளுக்கோ காதும் கேட்காது. ஏ, வள்ளி வாம்மா இந்தப் பூக்குடலையை எடுத்துக் கொண்டுபோ.

வள்ளி : தாத்தா! இதோ வந்துவிட்டேன், கையில் இருக்கும் வேலையை முடிக்க வேண்டாவா?

கிழவர் : சரி. சரி. வா, வா, விரைவாக; குடலையைத் தூக்க முடியாதே என்னால், வந்து எடுத்துக் கொண்டுபோ.

வள்ளி : (சிலமலர்ச் செடிகளிலுள்ள மலர்களைப் பறித்தெடுத்துக் கொண்டு, விரைவாக மலர்ச்செடிகளை ஒதுக்கிக் கொண்டு வந்து, பறித்த மலர்களைக் குடலைக்குள் போட்டு) தாத்தா! குடலையை எடுத்துக்கொண்டு போகிறேன். மெதுவாக வீட்டிற்கு வந்து சேருங்கள்.

கிழவர் : நான் வந்துவிடுவேன், விரைவாக நீ போய் மலர்களைக் கட்டி வெயில் மறைவதற்குள் போய் விற்று விட்டுவா.

வள்ளி : சரி நான் வீட்டிற்குப் போகிறேன்.

கிழவர் : மெதுவாக மலர்ச்செடிகளை மிதித்து விடாமல் கால் களைத் தூக்கி வைத்து நடந்துபோ. (கிழவர் கம்பூன்றி மெது வாக நடந்து வீடுபோய்ச் சேர்ந்து வள்ளியைப் பார்த்து) வள்ளி! மலர்களை மாலையாகக் கட்டிவிட்டாயா? இதோ, கேள். கேணியின் ஓரத்திலிருக்கும் முளரி (ரோசா)ச் செடிகள் வாடியிருக்கின்றனவே. நீ போவதற்கு முந்தி இரண்டே இரண்டு குடம் தண்ணீர் எடுத்து ஊற்றிவிட்டுப் போனால் நல்லது என நினைக்கிறேன், ஏனென்றால், காலையில் மொக்குகள் மலர வேண்டும். பார்; நீரில்லாவிட்டால் மொக்காகவே இருந்து உதிர்ந்துவிடும்.

மக்களைக் கொன்ற கொடியவர்கள்!

3. செயல்வினைக் குழு (Action Groups)

''மக்கள் தொகையினரை அழித்தொழிப்பதற்குச் சிறந்த உத்திகளை நாம் உருவாக்க வேண்டும். அதன் பொருள் என்னவெனில், சிற்சில இனங்களையே பூண்டோடு அழிப்பது என்பதுதான். அதைத்தான் நான் செய்ய விருக்கிறேன். அதுவே எனது பணி. செர்மன் இனத்தைச் சேர்ந்த இளைஞர்களை நான் போர் எனும் பெரு நிரயத்தில் காவு கொடுத்து, உயரின செர்மன் அரத்தத்தைச் சிந்த முற்படும்போது, புழுக்களைப் போன்று பெருகிவரும் தாழ்ந்த இனத்தினரை இலக்கக்கணக்கில் அழிப்பதற்கு எனக்கு உறுதியாக உரிமை உண்டு'

- அடால்ப் இட்லர்

மக்களை அழித்தொழிப்பதற்கு நாசிகள் கடைப்பிடித்த ஒரு சில வழிகள் கீழே விளக்கப்படுகின்றன.

1943 சூலை மாதம் சோவியத்து ஒன்றியத்தைச் சேர்ந்த கிராசுனோதார் நகரம். சாம்பல் நிறமுள்ளதோர் ஏழு (டன்) கல்லெடை பெரிய மூடிய சரக்குந்து (Lorry) ஒன்று வந்து நிற்கிறது. அதன் பொறி ஓடிக்கொண்டே யிருக்கிறது. நாசிகள் தளை செய்த சோவியத்துக் குடிமக்கள் ஆண்-பெண், குழந்தைகள் ஆகியோர் 60, 80 பேர் கொண்ட குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர். முதற் குழுவினர், அந்தச் சரக்குந்தின் அருகே கொண்டு வரப்பட்டு, அவர்

(முன் பக்கத் தொடர்ச்சி)

வள்ளி : சரி, தாத்தா (குடத்தை எடுத்துக் கொண்டுபோய் செடிகளுக்குத் தண்ணீர் விடுகிறாள். திரும்பி வந்து) தாத்தா! தண்ணீர் விட்டுவிட்டேன், நல்ல வேளையாகப் பார்த்துச் சொன்னீர்கள். இன்று தண்ணீர் விடாவிட்டால் நாளை மொட்டுகள் மலரவே மலராது. சரி தாத்தா பொழுது மறையும் நேரமாகிவிட்டது, நான் தெருவிற்குப் போகிறேன். (தலைக்கென்று நல்ல பூக்களைத் தெரிந்தெடுத்துத் தலையில் அணிந்து கொண்டு போகிறாள்).

கிழவர் : சரி போய்வா. (தனிமையாகத் திண்ணையிலிருந்து கொண்டு) ஆகா! ! இவள் அழகைச் சுவைக்க அவளின் தாயில்லை; போகட்டும் தாயின் இடத்திலிருந்த என் வீட்டுக் காரியாவது இருக்கக்கூடாதா? என்ன தீவினை செய்தேனோ? வள்ளிக்குத் தகப்பனுமில்லை, நான்தான் மிச்சம் (சவலை அன்பால்) மிகுதியாகப் படிக்கவில்லையே தவிர, பண்பில் என் பெயர்த்தியை மிஞ்சியவர் யார்? நல்ல அழகுடையவள்தான். எவனுக்குக் கொடுத்து வைத்திருக்கிறதோ? யார் கண்டது?

கண்ணையன் : (கிழவருக்குப் பின் பக்கமாய் வந்து) தாத்தா!

[தொடரும்]

களது ஆடைகள் அனைத்தும் களையப்படுகின்றன. அவர்கள் பிறந்த மேனியினராய் சரக்குந்தில் அடைக்கப்படுகின்றனர். அதன் கதவுகள் இறுக மூடப்படுகின்றன. சில நிமைய நேரம் சரக்குந்து அப்படியே நிற்கிறது. அந்த நேரத்தில் உள்ளே கரிவளி ஒருயிரகி (கார்பன்-மானுக்சைடு) திறந்து விடப்படுகிறது. உள்ளிருந்த அனைவரும் மூச்சுத் திணறிச் சாகின்றனர். பிறகு சரக்குந்து புறப்பட்டு, நகருக்கு வெளியே, ஏற்கனவே தோண்டப்பட்டுள்ள பெரும் குழிகளை நோக்கிச் செல்கிறது. வண்டியின் கதவுகள் திறக்கப்பட்டு, அத்தனை உடல்களும் குழியிலே கொட்டப்படுகின்றன. மீண்டும் சரக்கு வண்டி தனது இரண்டாவது நடைக்குப் புறப்படுகிறது. அதைப்போன்று, பற்பல இடங்களிலும் பற்பலச் சரக்கு வண்டிகள் இயங்கின. அவற்றிற்கு 'நடமாடும் நச்சு வளியறைகள்' என்று பெயர். கிராசுனோதார் பகுதியில் மட்டுமே 7,000 குடிமக்களைக் கொல்வதற்கு நாசிகள் இம் முறையைக் கடைப்பிடித்தனர்.

மற்றொரு முறையாவது: திறந்தவெளியில், பரந்த நிலப் பரப்பில் சுற்றிலும் கம்பி வேலி போடப்பட்ட சிறப்புக் காவல் இருப்புகள் ஏற்படுத்தப்பட்டன. அவற்றில் எத்தகைய கட்டுமானங்களோ, கூரைகளோ கிடையா. சிறை செய்யப்பட்டவர்கள் அனைவரும் அதில் அடைக்கப்பட்டனர். அவர்களில் பெரும்பான்மையினர் குழந்தைகள், உறுப்புகளற்றோர், பெண்கள், முதியோர் ஆவர். அவர்களின் நடுவே, கொடிய நோய் நச்சுயிரிகள் செலுத்தப்பட்ட சில சிறையாளிகளை நாசிகள் விட்டு விடுவர். அந்த நோய் மெல்லப் பிறருக்கும் பரவி, அந்த அடைப்பினிலுள்ளோர் எத்தனை நாட்களில் துடிதுடித்துக் சாகின்றனர் என்ற புது ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது.

செயல்வினைக் குழுக்கள்: (Action Groups)

இத்தகைய முறைகளில் மக்களைக் கொன்று குவிக்கும் பணி சிறப்புச் செயல்வினைக் குழுக்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அந்த மக்கள் வேட்டையாளிகள். சிறையாளிகளைக் கொண்டே பெரிய பெரிய ஆழமான குழிகளை வெட்டச்செய்தனர். அந்தக் குழிகளுக்கு மண்ணிலேயே, படிக்கட்டுகளும் வெட்டப்பட்டன. சிறையாளிகளாகப் பிடிபட்ட மக்களில் ஒரு குழுவினர், ஆடைகளனைத்தையும் களைந்துவிட்டு, அம்மணமாக, அப் படிக்கட்டுகளில் இறங்கிப், பதாளத்தை அடைந்தனர். செயல்வினைக் குழுக்களைச் சேர்ந்த ஓர் ஆள், அந்தப் பள்ளத்தின்மேல் முகட்டில் கால்களைக் குழியினுள் தொங்கப்போட்டவாறு, வாயில் ஒரு வெண்சுருட்டுடன் அமர்ந்திருந்தான் அவனது மடியில் ஒரு தானியங்கித் துமுக்கி, ('ஆட்டோமாடிக்' துப்பாக்கி) கிடந்தது. அந்தக் குழுவினர், பள்ளத்தின் அடிமட்டத்தை எட்டியவுடன், அவன் அவர்களை நோக்கிச்

சுட்டான். "அய்யோ! அம்மா!" என்ற அலறல். சிலர் உடனே இறந்தனர். வேறு சிலர் குற்றுயிராகக் கிடந்தனர். அரத்தம் பீறிட்டடித்தது. அதன்பின் அடுத்த குழுவினர். அதேபோன்று கீழே இறங்கிச் சென்றனர் அவர்களும் சுடப்பட்டு மடிந்தனர். அடுக்கடுக்காக, மக்கள் தங்கள் சவக்குழிக்குத் தாங்களே செல்லுமாறு வற்புறுத்தப்பட்டனர். சிலர் தங்களுக்கு மேலேயுள்ள அடுக்கினரின் ஊடே தலையை மட்டும் நீட்டினர்; வேறு சிலரின் கைகள் மட்டும் உயர்ந்தன. பள்ளத்தின் முக்கால் வாசி நிரம்பியபோது, ஏறக்குறைய 1 000 பேர் அதில் இருந்தனர். அடுக்கடுக்காக மக்கள் துடிதுடித்துச் செத்தனர்.

இறுதி மேல் அடுக்கு வந்தது. அவர்கள் பள்ளத்தில் இறங்கிச் செல்லவேண்டிய தேவை ஏற்படவில்லை. ஏனெனில், அப்பள்ளம் பெரும்பாலும் நிரம்பிவிட்டது. அவர்கள் மக்கள் உடலங்களின்மீது நடந்து சென்று, அவற்றின்மீது படுத்துக்கொண்டனர். அனைவரும் சுடப்பட்டனர். பள்ளம் நிரம்பியவுடன் மற்றொரு குழியில் இதே போன்று தங்களது முடிவை எதிர்நோக்கியிருந்த மக்கள், அந்தப் பள்ளத்தின் மேல் மண்ணைப்போட்டு, மூடினர்.

இந்தச் 'செயல்வினைக்குழு' வெறியர்களுக்கும், படைத்துறைகளுக்கும் எந்தத் தொடர்பும் கிடையாது. ஏதுமறியா பொது மக்களைக் கொன்று குவிப்பது ஒன்றே அவர்களது தொழில்.

'செயல்வினைக் குழு'வைச் சேர்ந்த பல ஆயிரக்கணக்கானவர்களில் 24 தலையாய தலைவர்களின்மீது மட்டுமே, மேலைய நேச நாடுகள் 1947-48-இல் உசாவல் நடத்தின. அவர்களில் 14 பேருக்குத் தூக்குத் தண்டனை கொடுக்கப்பட்டு, அதிலும் 4 பேரின் மீது மட்டும்மே, அஃது உறுதிப்படுத்தப்பட்டது. மீதியுள்ளவர்களுக்கு வாணாள் தண்டனை கொடுக்கப்பட்டு, அவர்களுக்கும், 1951-இல் மன்னிப்புக் கொடுக்கப்பட்டு விடுதலையாகிவிட்டனர். அந்தச் செயல்வினைக் குழுவைச்சேர்ந்த பெரும்பாலானவர்கள், இன்று மேற்கு செர்மனியிலும், அமெரிக்காவிலும் பிற மேலை நாடுகளிலும் சொகுசு வாழ்க்கை நடத்திக் கொண்டுள்ளனர்?

பின் குறிப்பு: இவ்வாண்டு மே முதல் கிழமையில் மேற்கு செருமனி செல்லும் அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ரொனால்டு ரீகன், இந்தக் கொலைக் கேடர்களும் அடங்கிய செருமனி நாசிகளது புதை மேடையில் சென்று மலர்வளையம் வைக்கவிருக்கிறார்.

—ஏ. எசு. எம்.

அன்பர்கள் கவனிக்க...

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டுபேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலையில் 5-மணிக்குமேல்,எழுதி இசைவுபெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கொள்கிறோம்.

அமைச்சர்.

என் தாய்நாடே!

புலவர். நாவை. சிவம்(க.மு) ;கல்.இ.

நாடெனிலோ நாடவளம் நல்கும் நாடாய்
நன்றிருக்க வேண்டுமெனும் குறளார் கூற்றின்
பீடினிலே தவழ்ந்திருந்தாய்! வேண்டு மட்டும்
பிறர்போற்ற வளந்தந்தாய்! ஆனால் இன்று
பாடினிலே நாடோறும் மூழ்கி ஞுலும்
பசியினிலே ஏழையர்கள் உழல்கின் றார்கள்!
கேடெனிலோ அஞ்சுகின்றேன் என்-தாய் நாடே!
களைத்திடுவாய் பசிபோக்கும் வழிய றிந்தே!

நாமெல்லாம் சேர்ந்தினிதாய் உழைக்க வேண்டும்
நல்லதொழில் உருவாக்கம் பெருக்கல் வேண்டும்.
ஆமாம்நேர் மையெல்லாம் வேண்டும் என்றே
அரசியலார் சொல்லிவைத்தார்! ஆனால் இன்று
ஏமாற்றிக் கொள்ளையிட்டுச் சுரண்டல் செய்தே
இன்புற்றுக் கொழுக்கின்றார்! அந்தோ! அந்தோ!
ஏமாற்றுக் கஞ்சுகின்றேன் என்—தாய் நாடே!
எத்தர்களை வணிகர்களைத் திருத்தி டாயோ!

எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்றே
இனிப்புடனே வாய்மணக்க மேடை மீது
நல்லோர்போல் எல்லாரும் பேசும் பேச்சை
நான்கேட்டு மகிழ்ந்ததுண்டு! ஆனால் இன்று
பொல்லாத சாதிமத ஏற்றத் தாழ்வைப்
பூரிப்பாய் வளர்க்கின்றார் நாட்டில் அந்தோ!
தொல்லைகட்கே அஞ்சுகின்றேன் என்—தாய் நாடே!
தூ!என்றே சாதியினை உமிழ்ந்தி டாயோ!

அறிவேதான் பொருளென்றும் அதனை நாளும்
அறிதலுமே அடைதலுமே நோக்க மென்றும்
அறிவாளர் சொல்லிவைத்த இலக்கி யத்தால்
அறிவுரையால் அறிந்துள்ளேன்! ஆனால் இன்று
அறியாமைச் சேற்றினிலே அழுந்தி நாளும்
அழிபொருட்கே அலைகின்றார்! அறிவை எண்ணார்!
அறியாமைக் கஞ்சுகின்றேன் என்—தாய் நாடே!
அறிவதனை வளர்ப்பதற்கே நெறிசொல் வாயே!

எண்ணுகின்ற போதெல்லாம் புதுமை யான
இன்பத்தை அள்ளியள்ளி வழங்கு கின்ற
தண்ணமிழ்தத் தாய்த்தமிழின் சுவையில் மூழ்கின்
தழைத்திடலாம்! செழித்திடலாம்! ஆனால் இன்று
நண்ணியுள்ள பிறமொழிமேல் காதல் கொண்டே
நவில்கின்றார்! மகிழ்கின்றார்! அந்தோ பொய்ம்மைப்
புண்ணினுக்கே அஞ்சுகின்றேன் என்—தாய் நாடே!
பொய்யகற்றி மெய்த்தமிழை வாழ்விப் பாயே!

ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற முற்படாது

ஏமாற்றிக் கொண்டிருக்கும் தமிழக அரசும், குழப்பிக் கொண்டிருக்கும் வஞ்சகர்களும்!

— மலர்மாறன்

1970-ஆம் ஆண்டு கிழக்கு வங்கத்தில் பாக்கித்தான் படைகள் கொடுமைகளைச் செய்யத் தொடங்கியவுடன், அதை அடக்கிப் வங்காள தேசத்தை விடுதலை அடையச் செய்ய இந்தியப்படைகள் செல்லவில்லை. முதலில் 'முக்தி பாகினி' என்ற தொண்டர் படையை மேற்கு வங்க மாநில அரசு அமைத்துக் கிழக்கு வங்கத்திற்குள் அனுப்பியது. அத்தொண்டர்படை அப்பொழுதிருந்த 30,000 பாக்கித்தான் படையினரைத் தோற்கடித்து, உரிமை பெற்ற வங்காள தேச அரசை முதலில் நிறுவியது. உடனே பாசானி போன்ற மூத்த வங்காளதேசத் தலைவர்கள் இந்தியாவிற்கு வந்து, தங்கள் தேசத்தை ஏற்பிசைவு செய்ய வேண்டுமென்று இந்தியத் தலைமையமைச்சர் இந்திராகாந்தியிடம் வேண்டினார்கள். அப்போது இந்திராகாந்தி வங்காளதேச அரசை ஏற்க மறுத்துவிட்டார்.

(இந்த உண்மை தமிழக மக்களிடம் சொல்லாமல் மறைக்கப்பட்டிருக்கின்றது—வேண்டுமென்றே மறைக்கின்றார்களா? அல்லது மறந்து விட்டார்களா?)

அதன் பின்னர் பாக்கித்தான் அரசு 1 இலக்கம் படைவீரர்களை வங்காளதேசத்திற்குள் கொண்டு வந்து, அஞ்சத்தக்க கொடுமைகள் செய்து, படுகொலைகள் செய்ததால், 100 இலக்கம் பங்களாதேச மக்கள் இந்தியாவிற்கு ஏதிலிகளாக ஓடி வந்தார்கள். அதன் பின்னர்தான் இந்தியப்படை வங்காளதேசத்திற்குள் நுழைந்தது—பாக்கித்தான் படையைத் தஞ்சமடையச் செய்து, வங்காளதேசத்திற்கு இரண்டாவது முறையாக உரிமை அரசை அமைத்துக் கொடுத்துவிட்டுத், திரும்பி வந்தது.

இந்த இரண்டாவது நிகழ்ச்சியைத்தான் தமிழக மக்களிடம் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர, முதலில் நிகழ்ந்துள்ள நிகழ்ச்சியைச் சொல்லவே மாட்டேன் என்கிறார்கள்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

நெடிதுயர்ந்த பண்பு, கலை, நாகரீகம்,
நீள்புகழின் உச்சியிலே தமிழர் வாழ்ந்தார்!
கொடிகட்டிக் கோலோச்சி வாழ்ந்தார் என்றே
கூறுகின்ற இலக்கியங்கள்! ஆனால் இன்றோ

அடிமையுற்றும் மிடிமையுற்றும் சோற்றுக் காக
அங்காந்தும் மானமின்றி வாழ்கின் றார்கள்!
அடிமைநிலைக் கஞ்சுகின்றேன்! என்—தாய் நாடே
ஆ! இனிமேல் விடுதலைக்கே வழிசொல் வாயே!

முதலில் நடந்துள்ள நிகழ்ச்சி போன்று, தமிழக அரசும் தொண்டர் படையை அமைத்து ஈழத்தமிழர்களுக்குப் பயிற்சியும், கருவியும் கொடுத்து ஈழத்தமிழர்கள் தங்கள் நாட்டை அமைத்துக் கொள்ள உதவினால் அஃது ஒன்றும் பெரிய தவறு அன்று.

விளம்பரப்படுத்தாமல் இந்த உதவியைச் செய்தால் இந்திய அரசு, கண்டும் காணாதது போல இருந்துகொள்ளும். ஏனெனில், இந்திய அரசுப் படைகளை அனுப்பி, அதனால் ஏற்படும் அனைத்துலகச் சிக்கல்களைச் சரிகட்டி, ஈழத்தமிழர்களுக்கு விடுதலை வாங்கிக் கொடுப்பதைவிட, இந்த முறையில் அவர்களின் தலையீடு இன்றியே ஈழத்தமிழர்களை உரிமைபெறச் செய்துவிட முடியுமல்லவா?

மேலும் ஈழத்தமிழர் தொண்டர் படை, உரிமை ஈழத்தமிழகத்தை அமைத்துவிட்டால், அதன் பின்னர் அதைத் தோற்கடிக்க வேறு படையை அனுப்ப, (வங்காளதேசத்திற்குள் மறுபடியும் ஓர் இலக்கம் படை வீரர்களைப் பாக்கித்தான் அனுப்பியது போல) இலங்கை அரசிற்கு எந்தவகைப் படையும் இல்லை. உரிமை பெற்ற ஈழத்தமிழ் நாடு நிலைபெற்று விடும்.

தப்பித்தவறித் தொண்டர் படையைச் சாக்கிட்டு அமெரிக்கப் படை வந்தால், இந்தியப் படை அதன்பின் தலையிட வேண்டிய நிலை ஏற்படும்-இந்தியாவிற்கு ஆதரவாக உருசிய வரும்-உலக நாடுகளின் கவனம் ஈழத்தமிழ் நாட்டின் மீது திரும்பும். செயவர்த்தனா செய்துள்ள கொடுமைகளை உலக நாடுகள் புரிந்து கொள்ள அஃது ஒரு வாய்ப்பாக அமையும். உண்மையைப் புரிந்துகொண்ட உலக நாடுகள் ஈழத்தமிழ் நாட்டை, பெருவாரியாக ஏற்பிசைவு செய்ய வழி ஏற்படும்.

அமெரிக்க நாட்டின் பக்கத்தில் நிகராகுவா என்று ஒரு நாடு இருக்கின்றது-அங்கே அமெரிக்கர்கள் யாரும் கொடுமைப் படுத்தப்பட்டுக் கொலை செய்யப்படவில்லை. ஆனால் அந்த நாட்டு அரசின் கொள்கைகள் அமெரிக்காவின் கொள்கைகளுக்கு மாறாக இருக்கின்றன என்பதற்காக, அந்த அரசைக் கவிழ்த்துவிட அமெரிக்கா திட்டமிட்டது. அதற்காக நிகராகுவா நாட்டைச் சேர்ந்த 8,000 இளைஞர்களுக்குப் படைப் பயிற்சியும், கருவிகளும் கொடுத்து, அரசை எதிர்த்துப் போராடும்படி அந்த நாட்டிற்குள்ளே அனுப்பி வைத்தது. அது மட்டுமன்று; தனது படையைக் கொண்டே அந்த நாட்டின் துறைமுகம், தொழிற்சாலைகள் ஆகியவற்றைத் தகர்க்க ஏற்பாடு செய்தது.

அமெரிக்காவின் இந்தச் செயல்களை எதிர்த்து நிகாரகுவா நாடு அனைத்துத்தேச அறமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கை உசாவ அனைத்துத்தேச அறமன்றத்திற்கு அதிகாரமில்லை என்று அமெரிக்கா கூறிக் கொண்டிருக்கின்றது.

இலங்கையிலே ஈழத்தமிழர்கள் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்படுகின்றனர். அந்தத் தமிழர்களைக் காப்பாற்ற தமிழக அரசும் ஈழத்தமிழர் இளைஞர்களுக்குப் பயிற்சியும், கருவியும்

கொடுத்து அனுப்பினால் அஃது ஒன்றும் நயன்மைக்கு மாறானது அன்று.

உதை எதிர்த்து இலங்கை அரசு அனைத்துத்தேச அறமன்றத்திற்குப் போகட்டுமே-அங்கே ஈழத்தமிழ் இனத்தை அழிப்பது சரி என்று கூறிவிடப்போகிறார்கள்? அப்படியாவது ஈழத்தமிழர்களுக்கு நடன்மை கிடைக்க வழி ஏற்படட்டுமே!

இந்தியத் தமிழகம் செயலில் இறங்கினால்தான் ஈழத்தமிழர்களுக்கு நயன்மை கிடைக்க வழி ஏற்படும்.

கடந்த 18 மாதங்களாக நடைபெற்று வரும் இப்படிப்பட்ட ஏமாற்றுதல்களாலும், தவறான கருத்துப்பரப்புதல்களாலும் தமிழர்கள் குழப்பமடைந்திருக்கின்றார்கள். இந்தக் குழம்பிய நிலையில் உள்ள அவர்கள் 'தங்களால் ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற ஒன்றுமே செய்ய முடியாது' என்று எண்ணும் அளவுக்குக் குழம்பியுள்ளனர்.

தமிழர்களின் இந்தக் குழப்பங்கள் தீர்க்கப்பட வேண்டும்.

ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க வேண்டிய செயவர்த்தன, எப்போது தமிழர்களை ஒழித்துக்கட்டுவேன் என்று கூறிப் படுகொலை செய்யத் தொடங்கினாரோ, அப்போதே தங்களைக் காப்பாற்றிக் கொள்ள ஈழத்தமிழர்கள் உரிமை ஈழத்தமிழகத்தை ஏற்படுத்த வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டு விட்டது.

இப்படிப்பட்ட நிலைமைகளில் நாடுகள் உருவாக்கப்படும் வழிமுறைகள் என்னென்ன என்பதை அனைத்துத்தேசச் சட்டம், '(Succession) வழிமுறை என்றும், (Revolt) புரட்சி என்றும்', வகைப்படுத்தி வைத்துள்ளது.

சைப்ரசு தீவிலுள்ள துருக்கியர்களைக் காப்பாற்ற துருக்கி அரசு தனது படையை அனுப்பி உள்ளது போலவும்-கோவாவிலிருந்த மகாராட்டிர மக்களைக் காப்பாற்ற இந்தியா படைத்துறை நடவடிக்கை எடுத்துப் போர்த்துக்கீசிய ஆட்சியை விரட்டியது போலவும்-கிழக்கு வங்கத்து மக்களைக் காப்பாற்ற மேற்கு வங்க அரசு முக்தி பாகினி தொண்டர் படையை அனுப்பியது போலவும், பின்னர் இந்திய அரசும் படையை அனுப்பியது போலவும், தமிழக அரசும், இந்திய அரசும் ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்திய அரசு முதலில் படையை இலங்கைக்கு அனுப்பினால், அனைத்துத்தேச அரங்கில் பல சிக்கல்கள் உருவாகலாம். அப்படிப்பட்ட சிக்கல்களைத் தவிர்க்க, தமிழக அரசும் முக்திபாகினி தொண்டர் படை போன்று ஈழத்தமிழர் விடுதலைத் தொண்டர் படை அமைத்து, இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

'தென்மொழி'யின் தமிழ்த்தொண்டு!

— கடலூர். மணிமாறன், க.மு கல்.மு,

இன்றைய தாளிகைகள் இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரிவதினும் வணிக நோக்கில் பொருளீட்டுதலையே முதன்மையாகக் கொண்டு வெளிவருகின்றன என்பதில் இரண்டு கருத்துக்கு இடமில்லை. மேனாடுகளுடன் ஒப்பிடுங்கால், தாளிகைகளை விலை கொடுத்து வாங்கிப் படிப்போர் தொகை நம் நாட்டில் மிகவும் குறைவே. மேலும் தமிழில் வெளிவரும் இதழ்களின் தரமும், அச்சாகும் படிகளின் எண்ணிக்கை அளவும் மனநிறைவைத் தருவதாய் இல்லை. எனினும் 'தென்மொழி' போலும் சில தனித்தமிழிதழ்கள் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றி வரும் தொண்டு போற்றத்தக்கதாகும்.

1959-இல் தொடங்கிய 'தென்மொழி' இதழானது ஏறத்தாழக் கால் நூற்றாண்டுக் காலமாக மொழி, இன வளர்ச்சிக்கு ஒல்லும் வகையான் உறுதுணையாய் இருந்து வருகிறது. தேவநேயப் பாவாணர் அவர்களைச் சிறப்பாசிரியராகவும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களைப் பொறுப்பாசிரியராகவும் கொண்டு இவ்விதழ் தொடங்கிய காலத்தில் உலா வந்தது. பல்வேறு எதிர்ப்புகட்கும் இடர்ப்பாடுகட்கும் சிறிதும் அஞ்சாது, தன் செம்மாந்த இலக்கியச் செலவை இன்றளவும் தொடர்ந்து நடத்தி வருகிறது.

இதழ்தோறும் வெளியாகும் ஆசிரியவுரைகளும், அறிவியல், மருத்துவம் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளும், எழுச்சியூட்டும் சிறந்த பாடல்களும் 'தென்மொழி'யின் தரத்தை என்றும் கட்டிக் காக்கும் அரண்களாகும்.

கல்லாத மாந்தர்களுக்கு அறிவு கொளுத்தும் செய்திகளைத் தருவதிலும், கற்றுணர்ந்த புலமையாளர்கட்கும், ஆய்வாளர்க

(முன் பக்கத் தொடர்ச்சி)

தமிழக அரசின் வலிமை இலங்கை அரசின் வலிமையைவிட நான்கு மடங்கிற்கும் அதிகமானதாகும். இவ்வளவு வலிமையுள்ள தமிழக அரசு இயந்திரத்தைக் கையில் வைத்திருக்கும் ம.கோ. இராமச்சந்திரன் இதுவரை ஈழத்தமிழர்களைப் காப்பாற்ற இப்படிப்பட்ட எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை. மாறாக ம.கோ. இராமச்சந்திரன் ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற விரும்பிச் செயல்படுபவர்களை மிரட்டி, அவர்கள் மீது வழக்குப் போட்டுக் கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் தமிழர்கள் ஆற்றவேண்டிய கடமைகள் என்ன?

தமிழர்களை ஏமாற்றியும், மிரட்டியும் கொண்டிருந்த ம.கோ. இராமச்சந்திரனின் ஆட்சியை வீழ்த்திவிட்டு, உண்மையிலேயே ஈழத்தமிழர்களைக் காப்பாற்றும் எண்ணம் கொண்டவர்களின் கைகளிலே தமிழக ஆட்சியை ஒப்படைக்க வேண்டும்.

அந்தச் செயல்தான் ஈழத்தமிழர்களைக் காப்பாற்ற தமிழர்கள் எடுக்கும் முதல் நடவடிக்கையாகும்.

(முற்றும்)

ளுக்கும் பயன்படும் வண்ணம் பொருள் செறிந்த படைப்புக ளுக்கே முதலிடம் நல்கி வருவது தென்மொழியின் தனிச்சிறப் பாகும். 'தென்மொழி' படிப்போர் தொகை குறைவெனினும் இவ்விதழ் தனித்து நின்றே ஓர் அறிவார்ந்த தமிழ்ப்படையை உருவாக்கியுள்ளது.

உலகெங்கும் வாழும் தமிழ்ப்பற்றுளர்களை ஓரணியிற் திரட்டி யதும், பல புத்தம் புதிய சொல்லாட்சிகளை வழக்கிற் கொணர்ந் ததும், தனித்தமிழ்த்தந்தை மறைமலையடிகளார், தமிழ்த் தென்றல் திரு. வி. க. ஆகியோருக்குப்பின், பேச்சிலும் எழுத்திலும் தனித் தமிழ் இமயமாய் ஒளிர்ந்த மொழி ஞாயிறு தேவநேயப்பாவாணர் அவர்களின் புலமைத் திறத்தை உலகுக்கு வெளிப்படுத்தி அதன் வழி, மொழி இனத் தொண்டில் முன்னணியில் நிற்பதும் தென்மொழியின் சீரிய தமிழ்த் தொண்டுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகள் ஆகும்.

'தென்மொழி'யில் வெளியான படைப்புகள் அனைத்தும் உயர்ந்த இலக்கியங்களாக இந்நாள் ஒளிர்கின்றன. அவற்றுள் இதழாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார்* தனி நூல்களாக எழுதி வெளிவந்த இலக்கியங்கள்: கனிச்சாறு (மூன்று தொகுதிகள்) நூறாசிரியம், எண்சுவை எண்பது, உலகியல் நூறு ஐயை, அறுபருவத் திருக்கூத்து போன்றவை குறிப்பிடத் தக்கவை ஆகும்.

'கெஞ்சுவதில்லை பிறர்பால்; அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை; எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை; உலகில் எவரும் எதிர் நின்றே'

என்ற வைர வரிகளைத் தன் கொள்கை முழக்கமாகக் கொண்டு, தொடங்கிய நாள் தொட்டு, இன்று வரை சிறிதும் தன் போக்கி னின்றும் வழுவாது, உண்மையை உணர்ந்தவாறே மறைக்காமல் ஒளிக்காமல் உரைக்கும் மன உறுதியுடன் தொடர்ந்து மளர்ந்து வருவது 'தென்மொழி'யின் தனிச்சிறப்பாகும்.

இலக்கியங்களும் இதழ்களும் இன்னோரன்ன ஆராய்ச்சிப் பனுவல்களும் ஒருவகையில் அறிவினைப் பெருக்குவதாய் அமைதல் வேண்டும். மொழித் தூய்மையைக் கெடுப்பதாகவும், மடமை நெறிகளை வளர்ப்பதாகவும், மன உணர்வுகளைச் சிதைப்பதாகவும், போலிமைகளுக்கே ஆக்கம் நல்கி உண்மையை ஒதுக்கி வைப்ப தாகவும், பாலியல் தொடர்பான கிளர்ச்சிகளைத் தூண்டுவதாக வும் அமையக்கூடிய எழுத்துகளால் எவர்க்கும் என்றும் பயனின்றாம்.

தங்கள் இலக்கியப்பணியின் வாயிலாக உயர்வான எண்ணங் களையும் உணர்வுகளையும் படைத்து, இக் குமுகாயத்துக்குப் பய

* தனி நூல்களாக வெளிவந்த ஆசிரியரின் பிற இலக்கியங்கள்: கொய்யாக்கனி, பள்ளிப் பறவைகள், மகபுகுவஞ்சி, வாழ்வியல் முப்பது—முதலியன.

னும் மகிழ்வும் விளைப்பதே எழுத்தாளர்களின் கடமையாகும். இத்தகு பணியில் 'தென்மொழி' தன்னை அணியப்படுத்திக் கொண்டுள்ளதை எவரும் மறுக்கவியலாது.

சிறுபாணாற்றுப்படை போன்ற சங்கக்கால இலக்கியங்களில் இடம் பெற்ற பாடல்களும், பாவலர் பாரதிதாசன் பாடல்களும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்பெற்றுத் தென்மொழியில் வெளியாகியுள்ளன.

'எங்குப் பிறப்பினும் வாழினும் என்னினம்
ஏற்றமுற் றுய்யவே வேண்டுவேன்—ஒரு
தங்கச் சிலையினைக் காப்பதுபோல், தமிழ்த்
தாயினைக் காக்கவே தூண்டுவேன்'.

என்னும் பாடல் வாயிலாகத் 'தென்மொழி' முன்னெடுத்துச் செல்லும் உயரிய இலக்கினை ஆசிரியர் பறைசாற்றுகிறார்.

குமுகாயவியல் (Sociology), மாந்தவியல், மனவியல் போன்ற துறைகளில் அடங்கிய அறிவுச் செல்வங்களைத் தமிழுக்கு வழங்கிய பெருமை தனித்தமிழ் இதழாகிய 'தென்மொழி'க்கு என்றும் உண்டு.

விளம்பரத்தை நம்பியே உயிர் வாழ்ந்து வரும் இன்றைய இதழ்களில், தவிர்ப்பாக விளம்பரத்தை ஒரு பொருட்டாக எண்ணாமல், இந்நாள் வரை அஃதின்றியே 'தென்மொழி' வெளிவந்து கொண்டிருப்பது பெரிதும் மதித்துப் போற்றத்தக்கவொன்றாகும்.

எக்காலத்துக்கும் எத்தகைய சூழலுக்கும் ஏற்புடையதாக அமைவதே உண்மை இலக்கியம் என்பதைத் 'தென்மொழி' என்றும் மறந்ததில்லை.

'தென்மொழி' சில அடிப்படைகளை உருவாக்கி வருகின்றது. தன் கருவியாற்றலைப் பெருக்கிக் கொண்டு வருகின்றது. தன் இயக்கம் உண்மையானதாகவும், உறுதி வாய்ந்ததாகவும், இறுதி வரை கட்டுத்தளராததாகவும்; வினையை நிறைவேற்றியே தீரும் விடாப்பிடி உடையதாகவும் இருத்தல் வேண்டும் என்பதற்காக, உண்மைத் தகுதியுடையராகச் சிலரையேனும் உருவாக்குதல் வேண்டுமென்றுதான் அல்லும் பகலும் அயராது உழைத்து வருகின்றது என்ற இதழாசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் கூறியிருப்பதிலிருந்து 'தென்மொழி'யின் தொலைநோக்கு தெற்றெனப் புலனாகும்.

ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம், சாவி, தாய், முத்தாரம், கல்கண்டு, கல்கி, கோகுலம் போன்ற இதழ்கள் பெரும்பாலும் தொடர்கதைகளையும், துணுக்குகளையும், சிறுகதைகளையும் முதன்மையாகக் கொண்டு வெளி வருகின்றன. இவ்விதழ்களில் சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகளும், இலக்கிய வளர்ச்சிக்குத் துணை புரியும் செய்திகளும் உலகளாவிய பரந்த சிந்தனை மின்னல்களும், இடம் பெறுவதில்லை. மேலும் குமுகாயப் பார்வையோ, குறை

ஓர் உண்மை உள்ளத்தின் கருத்து :

அறிஞரின் அஞ்சல்! அதன் அடிப்படையில்

பரமக்குடியில் நடந்த உ.த.க. மாநாடு, அந்த அறிஞர்க்குப் பறம்பை அறிவனையு , தமிழ்க் குடிமகனையும் நினைப்பூட்டும் என் பதை அறிஞரின் மடல் மூலம் அறிந்தே ».

ஆனால், 'அவ்வறிஞர் குழு'விலிருந்து நான் நழுவி விட்ட தாகக் கூறியுள்ளார் அவர்! அதன் கரணியம், அ ர் அறியமுடியா தடே! மக்களிடம் எளிய தொடர்புடைய எவரும் 'அறிஞர் குழு' வோடு நீளவும் உறவு கொள்ள முடியாமற் போய்விடுகிறது. அறி வின் உரம் அறிஞர்களை மக்களிடமிருந்து ஒரே ருவேளை பிரிந்து விடுவது காணக் கூடியதே! நிற்க, ன்? அ ஞர்கட்குள்ளும் 'பிளவு' ஏற்பட்டு விடுவதும் காண்கிறோம் தொகுக்கப்பட்ட அறி வின் முடிவுகள் பூனைம றி நிற்கின்றன

ஒருகால், பெரியா ர் பொறுப்பில் 'விடுதலை' இருந்தபோது, 'அறிஞரின்' கட்டுரை வந்தது. இன்று 'வீரமணி அதனை வெளி யிடுவதில்லை. வளர்ச்சி-மாற்றம்-சிதைவு என்பது உறவுகளில் ஏற்படும். அ ற்றை ஆய்ந்து பொது நலம் கருதி 'தனி நல வேற்றுமைகளை'த் தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்

பெருஞ்சித்திரனருடன் நெருங்கி இருந்த கால ஒன்று. வில கிச் செயல்பட்ட காலம் ஒன்று. என்றாலும், ஒருமையுள்ள கருத்துக் களில் என்றும் இணைந்து கொள்ளமுடியும். அதற்கு துடங்கியல் கண்ணோட்டம் உதவும் அக் கண்ணோட்டம் உள்ள இயக்கமும்

(முன் பக்கத் தொடர்ச்சி)

களைச் சுட்டிக் காட்டித் திருத்தும் முனைப்போ இருப்பதாக விளங்கிக் கொள்ள முடியவில்லை.

வெற்றாரவார விளம்பரங்களும் புகழ் மாலைகளும் பாராட்டு களும் தினையளவு செயலுக்கும், பனையளவு படப்பிடிப்புகளும் மிகுதியும் இடம் பெறும் இன்றைய இதழ்களில், 'தென்மொழி' மொழி நலன் விழையும் போர்வாளாக, இனப் பாதுகாப்புக் கேடயமாக விளங்கி வருகிறது. இத்தகைய இதழைப் புரப்பது உண்மைத் தமிழ் நெஞ்சங்களின் தலையாய கடனாகும்.

[1985 மே 25, 26 நாள்களில் கேரள மாநிலம் சித்தூரில் நிகழ்வுற்ற இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றத்தின், பதினேழாவது கருத்தரங்கில் வெளியிடப் பெற்ற ஆய்வுக் கோவை தொகுதி—3 இல் இக் கட்டுரை இடம் பெற்றுள்ளது. இதில் சில திருத்தங்கள் செய்யப் பெற்றுள்ளன.]

அதற்குப் பயன்படும். இதனை அவ்வறிஞர் மீள் ஆய்வு செய்தல் வேண்டும்.

22—7—1984-இல், மாநிலத் தன்னாட்சி மாநாடு. இதன் ஏற்பாட்டாளர் அறிஞர் கி. ஆ. பெ. வி., இம்மாநாடு 'வடவர் ஆளுமை எதிர்ப்பு நோக்கம் உடையதென்கிறார். இவ்வாளுமை தொடரின் தமிழ்நாடும் ஈழத்தமிழர் நிலை எய்தும் என அச்சம் தெரிவித்துள்ளார்.

இங்கே ஓர் உண்மை நடுவணரசின் ஓராண்மை, வடவர், தென்னவர் என அனைவரையும் தாக்கம் செய்து வருகிறது. 'இந்தி' யும் அவர்களை ஒடுக்க ஆளும் காரணத்தினால் உருவாக்கப்பட்ட கருவியே என அறிக! ஆகவே, **"நாம் ஒன்றுபட்ட ஆற்றலை வளர்க்கத் தேசிய இனங்களின் உரிமைக்காக போராடுதல் வேண்டும்"** என்ற பெண்ணாகடம் மாநாட்டுக் கருத்துக்குக் காதும், மனமும் கொடுத்தல் வேண்டும். இதனை 'அறிஞர்' ஆய்வாராக!

ஒரு கருத்து, அது 'வடவர் தமிழ்நாட்டில் குடியேறியது' பற்றியது. இந்திய அமைப்பில் 'குடியேற்றம்' கூலிகளுக்கும் - சுரண்டுபவர்க்கும் வாய்ப்பானதுதான்! இங்கே, நம் பொருளியல் பண்பாடு எப்படிச் சீரழிகிறது! இதற்கான மெய் விளக்கங்களைத் திரட்டி, ஆராய்ந்து மக்களிடம் விளக்கியாதல் வேண்டும்.

வடக்கு-தெற்கினை வெல்வது கிடக்கட்டும்! 'கீழைக்காற்று, மேலைக் காற்றை வெல்லும்' என்ற பாட்டாளிய உணர்வுடன் 'போராட முயல்வோம்!'. ஏனெனில், தமிழின ஒருமைக்கு நாம் திரட்டவேண்டிய அணிபற்றியும், திட்டமிடுதல் வேண்டும்! அதற்கான 'ஆய்வு' பற்றி 'அறிஞர்' முயலுதல் வேண்டும்!

ஆயின் ஒன்று. அறிஞர் அகவை கூடினும் இளமை குன்றுவுணர்வுடையவர். அவர் தம் உணர்வழுத்தம் இளைஞர் வேண்டிப் பெறவேண்டிய ஒன்றும். தமிழின நல மேன்மைக்கு அறிஞர் இடை முரிதலின்றி ஒன்றுபடுதல் வேண்டும்.

'அஞ்சலட்டை' அறிஞரின் எழுத்தால் ஒரு பெட்டகம் ஆகி விடுகிறது. இப்படிப்பட்ட தொடர்பு 'உ.த.மு.க. உறவை வலுப்படுத்தும்; வளப்படுத்தும்.

— **பறம்பை. அறிவன்**

இந்திய அரசே இன்னுமா உறக்கம்?

(இலங்கைத் தமிழரின் அவலநிலை விளக்க நூல்)

விலை: 5-00; அஞ்சல்செலவு: 1-00; பதிவஞ்சல்செலவு: 5-00

அறிவன் பதிப்பகம்: 2/5, காளிகோயில்தெரு, தமிழூர்-புதுச்சேரி-9.

0: 1086: தமிழினம் மீட்க இமை உறங்காதுழைக்கும் பாவல ரேறு ஐயா அவர்களுக்கு வணக்கம்.

'சொலல் வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது'—என்ற

குறளின் இலக்கணமாகவே தாங்கள் செயற்பட்டு வருகிறீர்கள். தனி ஈழம் என்ற குரல் ஓங்கி முழங்கும் போதே தனித்தமிழ்நாடு என்ற குரலும் ஒலிக்கத்தொடங்கி விடவேண்டும். கடந்த ஏப்ரல் திங்களில் ஒன்றிணைந்த நான்கு விடுதலை இயக்கங்களும் இன்று இறுதிப்போருக்கு அணியமாகிவிட்டன.

இணைந்த இயக்கங்களுடன் முகுந்தனின் (உமாமகேசுவரன்) இயக்கமும் இணைந்துவிடும் என்று நம்பிக்கை பிறக்கிறது. ஐயா அவர்களே இதற்கான முயற்சிகளை ஏன் எடுக்கக்கூடாது என்று என் போன்ற இளைஞர்கள் நினைப்பதில் தவறேதும் இல்லையல்லவா?

— அன்பன், வள்ளிசெல்வன், ஈரோடு

0:1087: தமிழின விடிவெள்ளியாம் ஐயா அவர்களுக்கு,வணக்கம்!

யான் ஈரோட்டில் நடந்த மாநிலச் செயற்குழுக் கூட்டத்திற்கு வரமுடியாமையை முதற்கண் பொறுத்தருள்வீர்! காரணியம், எமது தையலகத்தை அமரர்பூண்டியில் (பழனி வட்டம்) இருந்து உடுமலை நகருக்கு மாற்றிக்கொண்டோம். கடையில் அன்றைய நாளில் பணியாள்கள் இல்லாததால்தான் ஈரோடு வர இயல வில்லை. கடை இடமாற்றம் செய்ததைக் காலந்தாழ்த்தமாக அறிவிக்கிறேனென்று எனக்கு மனம் கூசுகின்றது. பொறுத்துக் கொள்ளுங்கள்.

கழகப் பொறுப்புகளில் ஐயா அறவாழியார் அவர்களுடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டுள்ளோம். தமிழீழ மக்கள் விடுதலைக் கழகப் போராளிகளுக்கு இப் பகுதியில் கடந்த ஒரு கிழமை தொடக்கம் கூட்ட ஏற்பாடுகளைச் செய்து ஆதரவு திரட்டிக் கொண்டுள்ளோம். த.ம.வி.க. தோழர்கள் நல்ல கருத்துத் தெளி வுள்ளவர்கள். சென்ற ஆண்டு மே-திங்கள் ஆனைமட்டியில் பயிற்சி வகுப்பு நடத்து கருத்துப் பயிற்சி எடுத்துக் கொண்டோம். இவ்வாண்டு இல்லையென்ற குறையை த.ம.வி.க. போராளிகள் நிறைவு செய்து விட்டதுடன் போராட்ட முறைகளையும் நல்ல தெளிவோடு கருத்துப் பயிற்சியளித்துக் கொண்டுள்ளனர்.

மேலும், சென்ற திங்கள் கரூர் நகரில் த.ம.வி.க. பொதுக் கூட்டம் நடைபெற்றது. அங்கு த.ம.வி.க. முதல்வர் முகுந்தன் அவர்களைக் காணும் வாய்ப்புக் கிடைக்கப் பெற்றேன். தனி அறையில் அவர் அரைமணி நேரம் போராட்ட முறையில் என்னென்ன மாறுபாடுகள் உள்ளன என்பது பற்றியும் விளக்க மாக எடுத்தியம்பினார்கள். ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளியக் கத்தாரோடு பேசியதில் இவ்வளவு கருத்துத் தெளிவு கிடைக்க வில்லை.

மற்று, மாநில செயற்குழுக் கூட்டத்துக்கு யான் வர இயல விலையெனினும் ஐயா அறவாழியார் வழி அனைத்துச் செய்திகளை யும் அறிந்து கொண்டேன். விரைவில், தெளிவான போராட்ட மாக அமைய எதிர்பார்க்கிறேன். நம் கழகப் போராட்டத்துக்கு எம்மால் இயன்ற அளவில் பொறுப்பேற்க அணியமாயுள்ளேன். உங்கள் வாழ்நாள் நோயின்றி நீடிக்க வேண்டுமென எதிர்பார்க் கிறேன். கடை வைத்ததன் நினைவாக நம் கழகத்துக்கு அன்பளிப் பாக உருபா-10/- இத்துடன் அனுப்பி வைக்கிறேன். ஏற்றுக் கொள்வீர்! உங்கள் மாணவன், — பூண்டி மறவன், உடுமலை.

0:1088: என்னுள்ளத்தில் ஆழ்ந்தஇடம்பெற்ற ஐயா அவர்களுக்கு, வணக்கம். தென்மொழி இதழுக்கு உறுப்பாண்மை பத்துக்

(கொடர்ச்சி ...)

சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஈடுபட்டேன். சிலரிடம் தொகை பெற்றேன். சிலரிடம் பெற இயலாமலும் போனது...... தமிழ்த்தொண்டு என்னும் போர்வையில் கழிவு பெறுவதை எண்ணி எண்ணி என் உள்ளம் வருந்துகிறது...... இதழ்களை வாங்கி விற்பனை செய்வதற்கே நான் சில தொல்லைகளையும் பொருள்நிலைத் தடைகளையும் ஏற்க வேண்டி இருக்கின்றதென்றால், தென்மொழி போலும் தனித்தமிழ்க் காப்பு இதழையும், சிறுவர் உள்ளிரமாம் தமிழ்ச்சிட்டையும், தமிழ்நிலம் அமைக்கும் தமிழ் நிலம் இதழையும் நடத்தும் தங்களுக்கு எத்தனை எத்தனை இன்னல்கள் இடையூறுகள் ஏற்படக்கூடும் என எண்ணிப் பார்க்கின்றேன். தங்களின் ஆற்றல் கண்டு வியக்கின்றேன். இறைவன் உண்டெனில் பேரருள் தங்கள்பால் செலுத்துவானாக. அன்பன்,

— புலவர். ப. எழில்வாணன், க.மு.;கல்.இ, பள்ளப்பட்டி

0: 1089 : ஐயா அவர்களுக்கு வணக்கம்.

தென்மொழி சுவடி 21, ஓலை 7, இதழ் கிடைக்கப் பெற்றேன். நற்றமிழின் நன்மை கருதித் தனித்தமிழ் நாடு அடையும் வகையில் துடிப்புக் கொண்ட அட்டைப் பக்கப் பாடலை உணர்வு முழுமையாகப் பல முறை படித்துச் சுவைத்துப் பொருள் கண்டேன்.

— இராவணதாசன், சென்னை-23

(சென்ற இதழில் வெளியான மடல் 1083-இன் தொடர்ச்சி)

என்னைப் பொறுத்தவரையில், என்னுடைய இனத்தின் மீட்சிக்காக உள்ளபடியே உழைக்கும் ஒரே உயிராக உங்களைத்தான் எண்ணுகின்றேன். ஏமாளித் தமிழரின் நெஞ்சத்தில் கருநாகம் போல் புகுந்துவிட்ட ....ஐயையோ, பத்துத் தலைமுறைக்காகப் பிள்ளைக் குட்டிக்குச் சொத்துச் சேர்த்துவிட வேண்டுமென்ற வெறிக்குத் தமிழைக் கருவியாக்கிய கொள்ளைக்காரர்......ஐயையோ, சல்லி சல்லியாய்ப் பெரியார் சேர்த்துவைத்த சொத்தைத் தின்று கொண்டிருக்கும் ......ஐயையோ நான் என்றுமே ஒரு பொருட்டாக எண்ணியதில்லை. என்னுடைய இந்தச் சொற்கள் வெறும் எழுத்தப் பூச்சு அன்று; நெல்லை மாவட்டத்துச் 'செயிர்த்தலை' மண்ணின் குருதியாயும் பேணிக்குரிய இந்த இராயவேல் சொல்லியது போல் நடக்கும் பூட்கை கொண்டவன்; நடக்காததை— இல்லாததை சொல்லாத கொள்கை பூண்டவன்.

இத்தகைய சூழ்நிலையில், அஃதாவது, தமிழ் விடுதலைக்கான புரட்சித்தீயைத் தோற்றுவிக்கும் மூலப்பொருளாகத் தாங்கள் ஒருவரே இருக்கும் சூழ்நிலையில் உங்களின் உயிர் எவ்வளவு முகாமையானது என்பதைத் தாங்கள் உணர்வீர்கள் என்று நம்புகின்றேன். அறிவியல் முறைப்படி வாணாளைக் கணக்கிட்டுச் சரியாகப் பணித்திட்டம் வகுத்துக் கொள்வீர்கள் என்றும் நம்புகின்றேன். இங்ஙனம் பாவாணர் வகுத்துக் கொண்டிருந்தால் தமிழுக்கு அரும்பெரும் அகரமுதலி முழுமையாகக் கிடைத்திருக்கும் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

அண்மைக் காலமாகத் தாங்கள் நெஞ்சு நொந்து எழுதி வருகின்றீர்கள். அருள் கனிந்து மனந்தளராதீர்கள். வெற்றி நமக்குத் தான், இவண்,

— க. இராயவேல், சென்னை-1.

தென்மொழி மின் அச்சகம். சென்னை-600 005. (கமிமகம்)